2000




# சூரியப் புதல்வர்கள்

eelamhouse.com

eelamhouse.com

நூற்றாண்டு கால அந்நிய அடக்குமுறைகளின் போது தமிழீழ மக்கள் அந்நிய அரசுகளுக்கெதிராக கிளர்ச்சி செய்துள்ளனர், போரிட்டுள்ளனர். இவைகள் அக்காலத்தில் மிகவும் கொடூரமாக ஆக்கிரமிப்பாளர்களால் அடக்கப்பட்டன. போராடியவர்களும் அழிக்கப்பட்டனர்.

இத்தகைய எழுச்சிகளை, விடுதலைப் போர்களை அடுத்த தலைமுறைகளுக்கு கிடைக்காதவாறு ஆக்கிரமிப்பாளர்கள் வரலாற்றைத் திரிபுபடுத்தினர். அத்தலைமுறைகளைப் போன்று மற்றைய தலைமுறைகளும் பின் தொடராவண்ணம் உண்மை வரலாறுகள் மூடி மறைக்கப்பட்டன.

இவ்வெழுச்சிகள் அன்று இலக்கியங்களாக வளர்த்தெடுக்கப்பட்டிருந்தால், அவை தொடர்ந்தும் மக்கள் மனதில் விடுதலை உணர்வைத் தட்டியெழுப்பியிருக்கும். வீரர்களின் நினைவுகளும் சாதனைகளும் மீண்டும் வீரர்களை உருவாக்கியிருக்கும்.

காலம் காலமாக போரிட்டு வந்த இனங்கள் மத்தியில் இலக்கியங்களிலும், தேசிய வாழ்விலும் இவை பேணிப்பாதுகாக்கப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

தமிழீழம் இனி ஒரு போதும் எந்தத் தலைமுறைகளும் அடிமைப்பட்டுப் போகாமல் ஆக்கிரமிக்கப்படாமல் இருக்க, எம் மாவீரர்களின் நினைவுகளும், வாழ்வும், அவர்களின் சாகசங்களும் என்றுமே நிலைத்திருக்க வேண்டும். மாவீரர் நாள் எம்மை விடுவிக்க தம்மை அர்பணித்தவர்களின் நினைவு நாள் மட்டுமல்ல, அவர்களின் இலட்சியத்தை தொடர நாம் உறுதி எடுக்கும் நாள். நாமும் எமது தலைமுறைகளும் இனியாருக்கும் அடிமையாக மாட்டோம் என்றும் அடிபணிய மாட்டோம் எனவும் சத்தியப் பிரமாணம் செய்யும் நாள்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

**அனைத்துலகச் செயலகம்**
**தமிழீழ விடுதலைப் புலிகள்**





eelamhouse.com






eelamhouse.com



# “சாவைத் தழுவிய எமது வீரர்களின் ஆன்மாவாக சுதந்திரம் எமக்காக காத்து நிற்கிறது.”

தாயக விடுதலையை தமது உயிரிலும் மேலாக நேசித்து, அந்த இலட்சியத்திற்காகப் போராடி மடிந்த எமது தேசத்தின் சுதந்திர வீரர்களை இன்று நாம் எமது இதயத்துக் கோயில்களில் சுடரேற்றிக் கௌரவிக்கிறோம்.

எமது தாயக தேசத்தின் விடுதலைக்காக ஆயிரமாயிரம் புலி வீரர்கள் களமாடி வீழ்ந்தார்கள். எமது வீர மண்ணின் மார்பைப் பிளந்து அந்த வீரர்களைப் புதைத்தோம். உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணிற்குள் மறையவில்லை. விடுதலையின் விதைகளாகவே எமது தாயின் மடியில் அவர்களைப் புதைத்தோம். வரலாற்றுத் தாய் அவர்களை அரவணைத்துக் கொண்டாள். ஆயிரமாயிரம் தனிமனித உயிர்கள் சரித்திரத்தின் கருவூலத்தில் சங்கமித்தன. அவ்வுயிர்கள் கருவாகி, காலத்தால் உருவம்பெற்று, தேசத்தின் சுதந்திரமாக வடிவம் பெற்றுவருகிறது. தமிழீழம் என்ற அந்தச் சுதந்திர தேசம் வரலாற்றின் குழந்தையாக விரைவில் பிறப்பெடுக்கும். அந்த சுதந்திர தேசத்தின் ஆன்மாவாக ஆளுமையாக எமது மாவீரர்கள் என்றும் எம்முடன் நிலைத்து வாழ்வார்கள்.

எமது வீர விடுதலை வரலாற்றின் ஒரு முக்கிய திருப்புமுனையில் நின்றவாறு இன்று எமது மாவீரர்களை நாம் நினைவு கொள்கிறோம்.

எமக்கு முன்னால், கால விரிப்பில், ஒரு புது யுகம் எமக்காகக் காத்து நிற்கிறது. எமக்குப் பின்னால், கடந்த காலத்தில், இரத்தம் தோய்ந்த விடுதலை வரலாறு நீண்டு செல்கிறது. மானிடத்தின் விடுதலைக்காக மாபெரும் தியாகங்கள் புரிந்த வரலாற்றுப் பெருமையுடன், எமது விடுதலை இயக்கம் பிறக்கப் போகும் புதுயுகத்தில் காலடி வைக்கிறது.

இந்தப் புதுயுகம் எமக்குச் சொந்தமானது. அநீதியையும் அடக்குமுறையையும் எதிர்த்து நீதிக்கும் சுதந்திரத்திற்குமாகப் போராடிய மக்களுக்குச் சொந்தமானது. இப்புதுயுகத்தில், எமது மக்களின் நெடுங்காலக் கனவு நிறைவுபெறும். இத்தனை காலமும் எமது மக்களைப் பீடித்த துன்பமும் துயரமும் அகன்று எமது மக்களுக்கு விடிவு பிறக்கும். எமது மண்ணுக்கு விடுதலைகிட்டும். எந்த இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் போராடி மடிந்தார்களோ அந்தப் புனித இலட்சியம் இப்புது யுகத்தில் நிறைவுபெறும்.

ஒப்பற்ற மாபெரும் இராணுவ வெற்றியின் சிகரத்தில் நின்றவாறு, இன்று நான் மாவீரர் நினைவுரையை நிகழ்த்துகிறேன்.

சுதந்திர தமிழீழத் தனியரசே எமது தேசியப் பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதை எமது மக்கள் எப்பொழுதோ தீர்மானித்து விட்டார்கள். எமது மக்களின் சுதந்திர அபிலாசையை சிலுவையாக தோளில் சுமந்து, இத்தனை ஆண்டுகளாக எமது இயக்கம் இரத்தம் சிந்திப் போராடி வருகிறது. இன்று, எமது சுதந்திரப் பயணத்தில், அந்த நீண்ட விடுதலை வரலாற்றில், ஒரு முக்கியமான திருப்பத்தை அடைந்துவிட்டோம்.

எமது போராட்ட இலக்கு, ஒளிமயமான எதிர்காலமாக, எமது கண்களுக்குத் தெரிகிறது.

நாம் நம்பிக்கையுடன் எமது இலட்சியப் பயணத்தைத் தொடர்வோம்.

எமக்கு முன்னால் எழக்கூடிய எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நாம் நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து செல்வோம்.

நாம் ஒரே மக்கள் சக்தியாக, ஒன்றுபட்ட தேசமாக, ஒருமித்தெழுந்து, எமது இலட்சியப் பாதையில் விரைந்து செல்வோம்.

சாவைத் தழுவிய எமது வீரர்களின் ஆன்மாவாக சுதந்திரம் எமக்காக காத்து நிற்கிறது.

1999ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு
தமிழீத் தேசியத் தலைவர் ஆற்றிய உரையிலிருந்து.


eelamhouse.com

# சூரியப் புதல்வர்கள்

அடிமை விலங்கொடிக்க ஆர்ப்பரித்தெழுந்த விரர்
மடமை கொழுத்தி மனித நேயம் வளர்த்திடவே
கொடுமை நிறை போரில் உயிர்க் கொடை கொடுத்து நின்று
குடிகள் குறைபோக்க குண்டேந்திக் களமாடுகிறார்.

சூரியப் புதல்வர்கள் சுதந்திரப் பிரியர்கள்
போரியல் நுணுக்கங்கள் பெரிதாய் புரிந்தவர்கள்- எடுத்த
காரியம் கைகூடும் வரை கண்தூங்காதுழைப்பவர்கள்
விரம் விளையாடும் விறு கொண்ட வேங்கை இவர்.

மில்லர் தொடக்கம் மிலேனியம் வரை தொடரும்
வெல்லரும் தாக்குதல்கள் விண்எட்டும் புகழ் கொட்ட
வல்லமை பல கொண்ட வகையான தாக்குதல்கள்
பல் வடிவில் தொடர்கிறது, பகைவர் படை அழிகிறது.

சொந்த பந்தம் துறந்து சுகபோக வாழ்விழந்து,
விந்தையாகப் போராடி வெற்றிகள் குவித்து நின்று
சிந்தை கவரும் எங்கள் சிறப்புமிகு பெரும் புலிகள்
வந்தனை செய்து வாழ்த்தும்- வரலாற்று நாயகர்கள்.

தானைத் தலைவன் ஆணை தலைமேல் தாங்கி நித்தம்
வான் தரை கடலில் வகையாகப் போராடி இன்று
பொன் அனைய உயிர் ஈந்து புவிபோற்றப் பலியாகும்.
கண்ணான கண்மணிகள் காவிய நாயகர்கள்.

மின் இடையார் குண்டேந்தி மின்னலெனப் பாய்ந்து
கண் இமைக்கும் நேரத்தில் கயவர் பலரை பலிகொண்டு
விண் ஏகும் விந்தை விதந்துரைக்க வார்த்தை இல்லை
பொன் எழுத்துக் கொண்டு பொறிக்கும் செயல் அன்றோ.

நீதிக்காய் போராடும் நெறியான மறவர்கள்- தமிழர்
வேதனை போக்க வெடிகுண்டாய் மாறியவர்
சாதனை பல படைக்கும் சரித்திர நாயகர்கள்
மேதினி போற்ற தம் மெய் அழிக்கும் விரர் இவர்.

குண்டேந்தி குறிபார்த்து கொலைஞர்களை அழிக்கும்
மாண்புமிகு புகழ் கொண்ட மறவர் எம் மாவிரர்
கொண்ட நற்கொள்கை குறைவின்றி நிறைவாக்குமிவர்,
தொண்டுகள் எம் நெஞ்சைத் தொட்டுத் துளைக்குதந்தோ!

விரத்தின் விளைநிலங்கள் விடுதலையின் வித்துக்கள்- தம்
சீரான எதிர்காலம் சிதைத்து இன விடுதலைக்காய்
போராடி வெற்றி தரும் புனிதப் பிறவிகளைப்
பாராட்டி பாதம் பணிவோம்- அவர் தம் பணி முடிப்போம்!

- - -






eelamhouse.com

# தமிழீழ மாவீரர் நாள் நவம்பர் 27

தமது இன்னுயிரை ஈந்து தமிழீழ விடுதலைப் போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும், ஈகங்களும், அருஞ்செயல்களும் மக்களிடம் எடுத்துச் சொல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும், குடும்பத்தினர்களும் அவலப்படக்கூடாது, என்ற நோக்கின் அடிப்படையில் எமது தலைவரின் எண்ணத்திலிருந்து உருவானதுதான் தமிழீழ மாவீரர் நாள்.

தமிழீழ விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப்போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து, நூறு என்ற நிலைமாறி ஆயிரக்கணக்காக உயர்ந்துவிட்ட நிலையில் ஒவ்வொரு மாவீரரையும் தனித் தனியாக ஆண்டு தோறும் அவரவர் நினைவு நாட்களில் நினைவுகூர இயலாது என்ற நிலையில் அனைவரையும் ஒரே நாளில் நினைவுகூரக்கூடியதாக தமிழீழ விடுதலைப் போரில் முதல் களச் சாவடைந்த எமது இயக்கவீரர் லெப்ரினன்ட் சங்கரின் (சத்தியநாதன்) நினைவு நாளான நவம்பர் 27ம் நாளை பொதுவான நாளாகத் தேர்ந்தெடுத்த எமது தலைவர் 1989ஆம் ஆண்டில் தமிழீழ மாவீரர் நாளை அறிவித்தார்.

விடுதலைப் போராட்டத்தில் உலகம் வியக்கும் வகையிலே புதிய வரலாறு படைத்து புதுமை சேர்த்து நிற்கும் எமது தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் மண்மீட்புப் போரிலே பல வெற்றிகளை குவித்துவரும் அதேநேரம் நாட்டை எல்லாத் துறைகளிலும் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களைத்தீட்டி வழிகாட்டி இயங்கிவருவதோடு, தூய்மையான தேசிய விடுதலைப் போரை வீறோடு நடாத்தி வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களைப் போற்றி நினைவில் நிறுத்தவும், அவர்களது பெற்றோரும், குடும்பத்தினரும் அல்லலுறும் நிலையை மாற்றவுமெனப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றார்.

1989ஆம் ஆண்டு நவம்பர் 27ம் நாளை முதலாவது தமிழீழ மாவீரர் நாளாகத் தமிழீழம் உணர்வார்ந்த நிலையில் கடைப்பிடித்தது. அன்றிலிருந்து தமிழீழத்தின் மிகப்பெரிய நிகழ்வாக தமிழீழ மாவீரர் நாள் தமிழீழ மக்களால் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

ஏனைய நாடுகளில் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுவதற்கும், தமிழீழம் மாவீரர் நாளைக் கடைப்பிடிப்பதற்கும் பெரும் வேறுபாடுகளுண்டு. ஏனைய நாடுகளிலெல்லாம் விடுதலைக்குப்பின் அமைந்த அரசுகளால் விழா எடுக்கப்படுகின்றனவே தவிர, போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலங்களில் விழாக்கள் எடுக்கப்படுவதில்லை. ஆனால், விடுதலைப் போராட்டம் வீறோடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையிலும், எதிரியின் அச்சுறுத்தல்கள், தாக்குதல்களுக்கிடையிலும், பல்வேறு நெருக்கடிகளுக்கிடையிலும் போராட்டத்தையும் நடாத்திக்கொண்டு தமிழ்மக்கள் மண்ணின் விடிவுக்காகத் தம் இன்னுயிரை ஈய்ந்த மாவீரர்களை எழுச்சியோடு நினைவு கூர்ந்து வருகின்றனர்..

வீரச்சாவடையும் தமிழீழ மாவீரர்களது வித்துடல்கள் மாவீரர் துயிலுமில்லங்களில் கல்லறைகளில் விதைக்கப்படும், நடுகற்கள் நாட்டப்பட்டும் வழிபாடியற்றப்படுகின்றன. மாவீரர் நாளில் மாவீரர்களின் பெற்றோர், குடும்பத்தினர் மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப் பட்டு, அன்று தமிழீழ மக்களால் போற்றி மதிப்பளிக்கப்படுகின்றனர். உலகில் எங்குமே தமிழீழ மாவீரர் நாள் நினைவு போல மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்வுள், அவர்களின் பெற்றோரும், குடும்பத்தினரும் போற்றப்பட்டு மதிப்பளிக்கப்படும் நிகழ்வுகள் நடைபெற்றதாகவோ, நடைபெறுவதாகவோ வரலாறில்லை.



### மாவீரர் நினைவாக அனுஷ்டிக்கப்படும் நாட்கள்

1. கடலிற் காவியமான கிட்டு உட்பட பத்து வேங்கைகள் நினைவாக. 16.01.1993

2. அன்னை பூபதி அம்மா நினைவு நாள், மார்ச் மாதம் 19ம் திகதி தொடக்கம், ஏப்பிரல் மாதம் 19ம் திகதி வரை. 19.03.1988 - 19.04.1988

3. கரும்புலிகள் தினம். 05.07.1987

4. தியாகதீபம் திலீபன் நினைவுநாள், செப்டம்பர் 15ம் திகதி தொடக்கம், செம்டம்பர் 26ம் திகதி வரை. 15.09.1987 - 26.09.1987

5. குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகள் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்த நாள், ஒக்டோபர் மாதம் 5ந் திகதி. 05.10.1987

6. தமிழீழ விடுதலைப் போரில் இன்னுயிர் ஈய்ந்த முதற் பெண்புலி மாலதி- (தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்) 10.10.1987

7. மாவீரர் நாள், நவம்பர் மாதம் 25ந் திகதி தொடக்கம், நவம்பர் மாதம் 27ந் திகதி வரை. 27.11.1982

**நன்றி: "மாவீரர் நாள் கையேடு" மாவீரர் பணிமனை, அரசியல்துறை, தமிழீழம்.**



eelamhouse.com

# முகமழிந்த எங்கட கிராமம்

சடுகுடு ஆடிய திடலில்
நிலவூறிக் கிடந்த இரவில்
சாக் குருவிகள் ஓலமிட்டன.
நீங்கள் சொல்லிக் கொள்ளாமலேயே
கிராமத்தை விட்டுப் போனீர்கள்.

பனையும் நெருஞ்சி படரும்
பாலை வெளியென்றா போனீர்?
கட்டாந் தரையும்
கடலுமான கிராமத்தில்
வாழ்வது இயலாதென்றா போனீர்?

முதிர் கிழவனைப் போன்று
கிராமத்தின்
முகமொடுங்கிய மாலையில்
ஜீப் வண்டிகளில் வந்தவர்கள்
எல்லா மகிழ்ச்சிகளின்
ஊற்றுக் கண்களையும் அடைத்தனர்.

துப்பாக்கிச் சனியன்களால்
திண்ணை, கடற்கரை
சந்தை, கோயில், முற்றம் எல்லாம்
தூக்கில் தொங்கிய நாளில் தான்
மீட்பர் வருவார் என்ற
துளி நம்பிக்கையும் செத்தது.

# மண்ணில் ஓர் உதயம்

காற்றூத விசில் அடிக்கிற
முதிர்ந்த ஆலமரங்களின் கீழ்
மாலைச் சூரியவொளி படருகிற வேளை
மண்ணில் உதயங்கள் நிகழ்ந்தன

கிராமத்தின்
மகிழ்ச்சியின் ஊற்றுக் கண்களை அடைத்த
எதிரிப் படையை மறித்து
வீரர்கள் சடுகுடு ஆடத் தொடங்குகையில் தான்
புத்தூற்றுக் கிளம்பிற்று
நதியாய் பிரவகித்ததெல்லாம் பிறகு

கிராமங்களுக்கு அவர்கள்
மீண்டு வந்த போது
நம்பிக்கையைத், துணிவை
சுதந்திரத்தின் திறவு கோலைக்
கொண்டு வந்தனர்.

அடிமைத் தனத்தை
அவநம்பிக்கைகளை
போலித்தனத்தை
பொய்மையை ஓட ஓட விரட்டினர்.

# நெக்குருகித் தோயும் நிகழ்வுலகு

நாங்கள் ஆகாய விமானங்களில் ஏறி
அகதிகளாய் வந்திறங்கிக் கொண்டோம்
விடுதலை வீரர்களின்
சுவாசக் காற்றெழுதின
உயிர்க்கவிதையா
எங்களைச் சுடவேணும் ஆம்!
ஆம்! அப்படித்தான் நிகழ்ந்தது;

இப்ப எல்லாம்
பனிக்குள் சிக்கிய
அகதிப் படகின் பயணிகளுக்கு
உங்கட நினைவே
பலமாய் இருக்கிறது.

நிமிரவும்
எழவும்
நாமும் மனிதர்கள் என்று
வாதிடவும்
துணிவு பிறப்பதும் உங்களினால்த் தான்

காலப் பெரு வெளியில்
கருவுற்று
மனிதன் புதிது புதிதாய்
பிறக்கும் தோறும்
வாழ்வு தந்த
மாவீரர்களை
நெக்குருகித் தோயும்
நிகழ்வுலகு.



கலை பண்பாட்டுக் கழக
பிரான்ஸ்





eelamhouse.com






eelamhouse.com

# சாவுக்கு நாள் குறித்து சரித்

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டமானது அதனது வரலாற்றில் பாரிய பல நெருக்கடிகளை சந்தித்திருக்கின்றது. வரலாற்றுப் பகைவனினதும், பிராந்திய வல்லரசினதும் இராணுவ நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கின்றது. இவ்வாறான நெருக்கடிகளிலிருந்து விடுபட இந்த விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் போராளிகள் பல உன்னத தியாகத்தைச் செய்திருக்கின்றார்கள், அதன் மூலம் இந்த நெருக்கடிகளைத் தகர்த்தெறிந்ததோடு மட்டுமல்லாது பல தலைகீழ் மாற்றங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களின் விளைவாகவே இன்று உலகம் வியக்கும் ஒரு போராட்டமாக தமிழீழ விடுதலைப்போராட்டம் பரிணமித்திருக்கின்றது. உலக வல்லரசுகளின் ஆயுதங்கள், நிதியுதவிகள், ஆலோசனைகளுடன் செயற்படும் ஓர் அப்பட்டமான இனவெறி அரசின் படைகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முறியடித்து தனது இலட்சியப் பயணத்தில் வீறுநடை போடுகின்றது. இந்தச் சாதனைகளைப் படைத்து மண்ணின் விடிவுக்காய் தம்மை அர்ப்பணித்துள்ள மாவீரர்களின் அதியுச்ச அர்ப்பணிப்பை தம்தாயக விடுதலைக்காய் செய்தவர்கள் கரும்புலிகள்.

ஒன்றுக்கொன்று எள்ளளவும் குறையாத வகையில் தமிழ் இனத்தை அழித்தொழிக்கத் தயங்காத சிங்கள இனவாதத்தின் முப்படைகளுக்கும் சிம்மசொப்பனமாய் விளங்குபவர்கள் இக்கரும்புலிகள்.

தனக்காக எதையும் செய்வது சுயநலம்; தனக்கு மிஞ்சியதை வழங்குவது தானம், தர்மம்; தன்னலம் கருதாது செய்வது சேவை; தன்னைப் பற்றி சிந்திக்காது பிறர்க்காகச் செய்வது ஈகம் என்றால் தன் தேசத்துக்காக தன் உயிரையே ஈகம் செய்ய நாள் நேரம் குறித்துக் காத்திருப்பது "கரும்புலிகள்" என்று அகராதியில் குறிப்பிட்டால் அதில் தவறேதும் இல்லை.

இந்தக் "கரும்புலிகள்" என்ற புதுப்பதத்தை உருவாக்கியவர் கரும்புலி கப்டன் மில்லர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை, தமிழினத்தை முழுவதுமாக அழித்தாவது ஒடுக்கி விடுவது என்ற முடிவுடன் அதற்கு கால்கோளாக வடமராட்சி மீது படையெடுத்தது சிங்கள இனவாதம். இனவாதத்தின் முன்னோடியான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் பூரண ஆசீர்வாதத்துடன் அவரது சீடன் லலித் அத்துலத் முதலியின் வழிகாட்டலுடன் வடமராட்சியைச் சிங்களப்படை ஆக்கிரமித்துக்கொண்டது.



இந்த ஆக்கிரமிப்பை விஸ்தரித்து யாழ் குடாநாட்டை முழுவதுமாக தனது கைக்குள் கொண்டு வந்தால் தமிழர் விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடலாம் என்ற கனவுடன் இறுமாந்திருந்த சிங்களப்படைகளை தனியொருவனாக அதன் குகையுடனேயே அழித்தவர் கரும்புலி கப்டன் மில்லர்; இதன் மூலம் சிங்கள இனவாதத்தின் கனவைச் சிதைத்ததுடன் தமிழினத்தை பேரழிவினின்றும் காத்தவர் கரும்புலி கப்டன் மில்லர். மில்லர் வழியிலே எதிரி முகாமுக்குள் தனி ஒருவராக வெடிமருந்தேற்றிய வாகனத்துடன் சென்று தனது உயிரெனும் ஆயுதத்தால் எதிரிப் படை முகாம்கள் அழித்தவர்களின் சரித்திரம் தமிழீழ வரலாற்றிலே பொறிக்கப்பட்டிருக்கிறது.

மில்லருடன் ஆரம்பித்த இந்த சகாப்தம் கரும்புலிகள் என்னும் உயிராயுதம் ஆக்கிரமிப்புத் தடைகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கும். அவர்களின் ஆக்கிரமிப்பு மனோபாவத்திற்குப் பேரிடியாக விளங்கும் ஒன்றாக இருந்துவருகின்றது இந்த உயிராயுதத்தின் கடல் பிரசன்னமானது.

கடலிலே எல்லையற்ற ஆதிக்கத்தை வைத்துக்கொண்டு கடற் தொழிலாளர்களினதும் கரையோரத்தில் வாழும் மக்களினதும் வாழ்க்கையை அச்சுறுத்தி வந்ததோடு, யாழ் குடாநாட்டை முற்றுகையிட்டு முறியடிக்கும் முயற்சியில் சிங்கள அரசு ஏவிவிட்ட கடற்படையின் ஆதிக்க வலுவையும் குன்றச் செய்தது. பீரங்கிக் கப்பல்கள், மிதக்கும் டாங்கி என வர்ணிக்கப்பட்ட இஸ்ரேலிய டோராக்கள் என்பன கடற் கரும்புலிகளின் காற்றுப்பட்டே சமுத்திரத்தில் சமாதியடைந்தன.

அச்சமின்றி தமிழீழக் கடற்பரப்பில் நடமாடிவந்த சிங்களக் கடற்கலங்கள் தமிழீழக் கடற்பரப்பில் நடமாட முடியாது சர்வதேசக் கடற்பரப்பிலேயே அச்சத்துடன் நடமாடும் நிலையை எட்டியுள்ளன. தனித்து வந்து, நிராயுத பாணிகளாக நின்ற மக்களை அழித்துவந்த அவை அலை அணியாகக்கூட அஞ்சி அஞ்சி நடமாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

நவீன தரையிறக்கும் கலங்கள், தாக்குதல் கலங்களை கோடிக்கணக்கான பணத்தை அள்ளிக் கொடுத்துக் கொள்வனவு செய்தும் முல்லைத்தீவில் இராணுவத் தளமும், ஆனையிறவுக் கூட்டுத்தளமும் வீழ்ச்சியடைந்தபோது கைபிசைந்து பார்த்துக்கொண்டு





eelamhouse.com

# ரம் படைக்கும் கரும்புலிகள்

நிற்க வைத்தவர்கள் கடற்கரும்புலிகள்.

இன்று தமிழீழக் கடற்பரப்பில் விரும்பியவாறு நடமாடி எதிரிப் படைகளின் முகாம்களை முற்றுகையிடும் பலத்தை விடுதலைப் புலிகளின் படையணிகளுக்கு வழங்கியவர்கள். அவர்களுக்கு கவசமாக உள்ளவர்களும் இவர்களே.

நாளும் பொழுதும் மக்களைக் கொன்றொழிக்கும் சிறீலங்காவின் விமானப்படைக்கும் இவர்கள் அச்சுறுத்தலாக விளங்கத் தவறவில்லை. இரை கொள்வதற்காக தன் அலகைத்தீட்டிக்கொள்ள இக் கழுகுகள் புகும் பொந்துக்குள்ளும் புகுந்து அவற்றை அழித்துவிடும் ஆற்றல் படைத்தவர்கள் கரும்புலிகள்.

இக் கரும்புலிகளுக்கு அஞ்சிய சிங்கள இராணுவம் ஓரிடத்தில் நிலை நிறுத்தித் தாக்குதல் நடத்தும் ஆட்லறி போன்ற கனரக ஆயுதங்களைக்கூட ஓரிடத்தில் நிறுத்துவதில்லை. அணியாகப் புகுந்த கரும்புலிகளால் அழிக்கப்பட்டு குழல் வேறு உடல் வேறாக அவற்றைப் பார்த்த அனுபவம் சிங்களப் படைக்கு பல உண்டு. தீப்பற்றி எரிந்த ஆயுதக் களஞ்சியங்கள் பல உண்டு.

ஆயிரக்கணக்கான படையினர் நிலைகொண்டிருந்த படைத்தளங்களைக் கைவிட்டுச் சிதறி ஓடும் சிங்கள இராணுவம் தமது எஜமானர்களிடம் புலம்பும்போது கரும்புலிகள் பற்றிய தமது அச்சத்தை வெளியிடத் தவறுவதில்லை.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இடையூறாய், தடைகளாய் நிற்கும் எதனையும் கரும்புலிகள் விட்டுவைப்பதில்லை என்பதை வரலாறு பலமுறை எடுத்துக் காட்டியிருக்கிறது. எதிரிக்குப் பாதுகாப்பான இடமென்று எதுவுமே இல்லை என்று நிரூபித்திருக்கிறது.

இவ்வாறு அதி உன்னத தியாகங்களைப் புரிந்துவரும் கரும்புலிகளின் எதிர்பார்ப்பு தமது தேச விடுதலை மட்டுமே. அதற்காகவே அவர்கள் தமது சாவுக்கு நாள் குறித்து காத்திருந்து காவியமாகின்றனர்.

அவர்களின் அதியுன்னத தியாகம் அவர்களது இலட்சியத்தை அடைய என்றும் வழிகாட்டியாக இருக்கும் என்பதை தமிழீழ விடுதலைப் போராட்டம் அடுக்கடுக்காகச் சாதித்துவரும் சாதனைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. தலைவரின் வழியிலே அணிவகுத்து நிற்கின்ற புலிகளின் சேனையும் மக்கள் சேனையும் களத்திலே கரம்கோர்த்து நின்று புரிந்துவரும் சாதனைகள் கரும்புலிகளின் ஆன்மாவுக்கு நிச்சயம் மகிழ்ச்சி தருவதாகவே இருக்கும்.

இந்த வெற்றிகளைப் பலமாகக் கொண்டு அனைவரும் அணிதிரண்டு போராட்டத்தை விரைவுபடுத்தி கரும்புலி மாவீரர்களின் கனவுகளை வென்றெடுப்பதைத் தவிர வேறெதுவும் அவர்களின் தியாகத்திற்கு ஈடாகாது.






eelamhouse.com





eelamhouse.com

# மறவர் படை வெல்லும்!

ஆயிரம் சூரியர் கண்கூசும்–
அளவிற் தியாக ஒளியுடையார்!
தாயினும் மேலாய்த் தமிழீழத்
தாயகம் மீதுயர் பற்றுடையார்!
சாயினும் உடலம் தூள்பட்டே
சாகாப் பெரும்புகழ் வடிவுடையார்
வாயினும் மனத்தும் அவர் நாமம்
வாழ்த்தி வணங்குதல் கடனாகும்!

நெஞ்சில் உறைந்த பெரு வீர
நெருப்பைச் சினத்தில் விழி கொட்டும்!
கொஞ்சும் பசிய இதழ் இடுக்கில்
குப்பி விசமும் தேன் சொட்டும்
அஞ்சுதல் என்பது அறியாத
அவரின் புகழோ விண் முட்டும்!
நெஞ்சம் நிறைந்த தமிழீழம்
நிச்சயம் இவரால்தான் கிட்டும்

வானத் தெதிரி விமானங்கள்
மழையாய்க் குண்டு பொழிந்தாலும்!
சேனைப் படைகள் ஆயிரமாய்ச்
சினந்தே போரிற் குதித்தாலும்!
தானமாக மாவீரர்
தலைகள் மண்ணிற் குவிந்தாலும்!
மானத் தலைவன் வழி செல்லும்
மறவர் புலிகள் படை வெல்லும்!



நிலாதமிழின்தாசன்


eelamhouse.com

# தியாக தீபம்

## லெப்.கேணல் திலீபன்

வீரப்பிறப்பு: 29.11.1963 ஈகச்சாவு: 26.09.1987

**உண்ணாநோன்பு**

**15.09.1987 - 26.09.1987**

"தான் நேசித்த மக்களுக்காக,
தான் நேசித்த மண்ணுக்காக
ஒருவன் எத்தகைய உயர்ந்த
உன்னதமான தியாகத்தைச் செய்ய
முடியுமோ அந்த அற்புதமான
அர்ப்பணிப்பைத்தான்,
திலீபன் செய்திருக்கிறான்."



"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"



eelamhouse.com



இனிவரும்

காலம் எம்

தலைமுறைக்கானது

**மாவீரர்களே!** நீங்கள் சூரியப் புதல்வர்கள். சூரியத் தலைவனின் வழிகாட்டலில் பிறப்பெடுத்த சூரியக் குழந்தைகள். தேசத்தின் விடிவு என்ற ஒரே இலட்சியத்திற்காக உங்களை உருவாக்கியவர்கள். உங்கள் நினைவுகளைச் சுமந்து, உங்கள் இலட்சியங்களிலே நாங்கள் உறுதியெடுத்துக் கொள்கிறோம். எங்கள் நெஞ்சக்கூட்டினில் ஒருமுறை உங்கள் பெயர்களை மீள்பதிவாக்கிக் கொள்கிறோம். தாயகம் மீளும் என்ற அசையாத நம்பிக்கையுடன், நீங்கள் சென்ற அதே பாதைச்சுவடுகளிலேதான் எங்கள் பயணமும் தொடர்கின்றது.

கார்த்திகைத் திங்கள் 27. எங்கள் தேசத்து வானமும் தன் தவப்புதல்வர்களின் வீரம் எண்ணி ஆனந்தக் கண்ணீர் சொரிவாள். எங்கள் உணர்வுகள் எம்மிடம் சொல்லாமலேயே விடைபெற்றுச் சென்றுவிடும். எம்மோடு வாழ்ந்த வீரர்கள் உறங்கும் அந்தத் துயிலும்இல்லம் போல், எந்த ஆலயமும் புற அகத் தூய்மையுடன் இருப்ப தில்லை. மாவீரர்வரிசையின் முதற்பலி தானேதான் என்பது பற்றிச் சிந்திக்காமலேயே தலைவன் மடியில் விழி மூடிப்போன மாவீரன் சங்கரின் நினைவுக்கல் தொடங்கி, நினைவுச்சுடர் ஏற்றும் அந்தக் கணப்பொழுதிலும் தாய் மண்ணிற்காய் விழ்ந்த மாவீரனின் கல்லறை வரை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரலாற்றை எடுத்தியம்பும். ஒவ் வொன்றும் புதிய வரலாறுகள். ஒவ்வொன்றும் உன்னதமானவை. காலம், காற்று இவைபோல் எளிதில் அழிக்க முடியாத வரலாறுகள். எங்கள் சுதந்திர வாழ்விற்கான விலையாகக் கொடுக்கப்பட்ட வரலாறுகள். மாவீரர்கள் துயில்கின்ற அந்த மண்ணில் எங்கள் கால்கள் படும்போது, மேனி மயிர்க்கூச்செறியும். கண்கள் பனிக்கும்.

உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் - அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

இப்படியெல்லாம் எத்தனை உணர்வுகளுடன் எங்கள் வாழ்வு கழிந்தது. நீங்கள் உறங்கும் மண்ணில், உங்களுடன் உறவாடியபடியே நாங்கள் உறுதி பெற்ற பொழுதுகள்...... எங்கள் மண்ணின் பசுமையுடன் கலந்த உங்கள் நினைவுகள்.......

மாவீரர்களுக்கு இறப்பு வருவதில்லை என்பதை புரிந்துகொள்ளாத எத்தர்களினால், உங்கள் துயிலிடம் பிய்த் தெறியப்பட்டது. நீங்கள் எங்கள் உணர்வுகளிலே கலந்திருப்பதைப் புரிந்து கொள்ளாமல், மண்ணுக்குள் மட்டுமே புதையுண்டுபோனதாய் அவர்கள் தப்பெண்ணம் போட்டனர். எத்தனை பெரிய மடமை. நீங்கள் மீண்டும் மீண்டும் முளைத்து எழுவதை எந்தப்பகைவனால் புரிந்துகொள்ளமுடியும்.

எங்கள் கண்களும் பனிக்கத்தான் செய்கின்றது. ஆனாலும் ஏனென்பதுதான் புரியவில்லை. இழப்புக்களால் உர மேறியதுதானே எமது தேசம். உங்களுக்கு அழுவது பிடிக்காது. செய்வது மட்டுமே பிடிக்கும்.
மாவீரர்களே! நாம் உறுதி செய்கின்றோம்.

இந் நூற்றாண்டு எமக்கானது. இனிவரும் காலம் எம் தலைமுறைக்கானது. உங்கள் கனவுகள் விரைவில் நனவாகும். அதுதான் தமிழீழம் என்று போற்றப்படும்.



eelamhouse.com

# வீரரே உங்கள் வரலாறு சரித்திரமாகும்

ஓ... மாவீரச் செல்வங்களே
இதமான இனிய தென்றல்களாய்
எம்முன் உலா வந்தவர்களே
இதயத்தில் எம் தேசத்தைச்
சுமந்த உத்தமர்களே
தாயகத்தில் கொண்ட தணியாத
தாகத்தை உம்மிதயக் குருதியதில்
நிறைத்து அதனை இம் மண்மீது
இறைத்துச் சென்ற உன்னதமானவர்களே
உலகத் தமிழரை உவகை கொள்ளவைத்து
விடியலுக்கு வழி சமைத்த வேள்வித்
தீயின் பிழம்புகளே - உங்களின்
ஒளி முகத்தை விதை குழிக்குள்
ஒழித்து வைத்து மௌனித்துப் போன
நிஜத்தையேனோ மனம்
ஜீரணிக்க மறுக்கின்றதே.
உணர்வுகளை நெஞ்சினுள் பூட்டி
உறவுகளின் வாழ்விற்காய்
உடலினைப் பிய்த்தெறிந்து
உயிரினைச் சிட்டாக்கி...

வர்ணம் காட்டி மறையும்
வானவில்லாய் மறைந்தீரே
வானங்கூட ஒருகணம் சிலிர்த்தது
உங்கள் வார்த்தைகளின் உறுதியில்,
கருமைக்குள் புகுந்திருந்த
கதிரவன் விரைகின்றான் உங்கள்
காலடி பதிந்த களங்காண - இதோ
விடுதலைக்காய் நம் தேசம் விரைகின்றது.
தேசத்தின் விடியலுக்காய்
தேகத்தைக் கொடுத்தோரே - நீங்கள்
சுவாசித்த காற்றில் இன்னமும் உங்கள்
உயிர் மூச்சு உலவும், நீங்கள்
கால் பதித்த மண்ணில் உங்கள்
கனவுகள் நனவாகும்.
உங்கள் உன்னதமான
உயிர்க் கொடையால் உம் பெயர்
சொல்ல உயரப் பறக்கும்
தேசியக் கொடி.
விரரே உங்கள் வரலாறு சரித்திரமாகும்.

த. தேசாயினி



eelamhouse.com

# தமிழீழம் மலர்வது தூரமில்லை!

மண்ணை மீட்க... அன்று
எண்ணம் கொண்டு
ஈழம் வேண்டும்... என்று
ஏக்கம் கண்டு
குண்டு பட்டு... இன்று
மண்ணைத் தொட்டு
விண்ணைத் தொட்ட... எங்கள்
மாவீரனே!

சுற்றம் விட்டு... வீட்டு
முற்றம் விட்டு
கொட்டும் மழை... பட்டு
ஒட்டிக் கொண்டு
பசியும் கெட்டு... தரையில்
குறாவிப் படுத்து
காட்டில் வாழ்ந்த... எங்கள்
காவலனே!

சேவை தொண்டு... என்று
சாவை வென்று
தேவை வேண்டு... மென்று
ஆசை விட்டு
ஆவி தூசு... என்று
ஈழம் வேண்டி
ஐயா நீ.. போனாயே
நம்மை விட்டு!

மண் சிறக்க... ஈழம்
மலர வைக்க
கண் குவித்து... தமிழ்
வாழ வைக்க
கல் கலங்க... சிறு
புல் புலம்ப
புலியே நீ வீழ்ந்தாயே
நாம் துடிக்க!

உன்னைப் பெற்றோர்... நற்
பொன்னைப் பெற்றோர்
மண்ணைக் காக்க... உன்னை
தாரை வார்த்தோர்
கண்ணைத் தந்து... தம்
முயிரை ஈந்தோர்
விண்ணை முட்டும்... புகழ்
என்றும் காண்போர்!

நாளை வரும்... தங்க
ஈழம் வரும்
நாங்கள் ஓடி வரும்
நாளும் வரும்
வேளை வரும்... காணும்
காலம் வரும்
கண்ணீர் வடிக்கின்ற
நேரம் வரும்!

புலிகள் உடலின்று
சிந்தும் இரத்தம்
உலக மெங்கும்... தமிழ்
சிந்தும் முத்தம்!
வேங்கை வெற்றி... எங்கள்
வாழ்வின் சித்தம்
பொங்கும் நித்தம்... நாளை
வெற்றிச் சத்தம்.

உடலை தந்தும்... நீ
இறக்க வில்லை
கடலைக் கடந்தும்... நாம்
மறக்க வில்லை
சுடலை சென்றும்... தமிழ்
அழிவதில்லை... தங்கத்
தமிழீழம் மலர்வதும்
தூர மில்லை!



உலகத்தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - அமெரிக்கா


eelamhouse.com













போர்மேகம் மூடி
புனிதமான தாய் நிலத்தின்
பசுமைகளை அழித்துவிடத் துடிக்கும்.
என்றாலும்...
வேரும் விருட்சமும்
துளிர்விடும் தளிர்களும்
தீயிடை வெந்து கருகிடும் பூமியோ...
உயிர்ப்புடன் எப்போதும் உயர்வாயுள்ளது.

உயிர்ப்பூ ஊதிய தாய்மண் பிள்ளையின் காலடிபற்றியே
விழிநீர் சிந்திடும் தாய்மையின் தவிப்பும்..
தேசமே திரண்டு, நெஞ்சு நெகிழ ஒன்றாகி நின்று
துடிக்கின்ற துடிப்பும்...

ஆயிரமாயிரம் ஆண்டுகள் சாகாவரம் பெற்று..
உயிர்க்காற்றை நிரப்பி.. தேசம் எழும் கணங்கள்.



eelamhouse.com

# ஓயாது அலையெழும்

வெய்யோனும் விழிமூடி மேற்திசை வீழ
பூமி இருட்டை இழுத்துப் போர்க்கும்
கண்களில் நீர்வெள்ளம் கட்டியே நிற்க
கால்கள் தூயவர் துயில்இல்லம் ஏகும்
தோழர் கலந்த காற்றெங்கும் விரவி
சுவாச விழிகளை தூய்மை செய்யும்
கல்லாக்கி மனத்தைக் கட்ட முனைந்தாலும்
ஆற்றாது விழி அழுது தொலைக்கும்.

கோடிமலர் சொரியும் கோவில்மணி பாடும்
குடாவில் விதைகுழிகள் குலைந்தல்லோ கிடக்கும்
ஐயகோ நெஞ்செலாம் அனல்மேவி காயுதே
யாரொருவர் சுடரெடுத்து மண்மேட்டில் வைப்பர்
உலுத்தர்கள் எங்கே? உழுதல்லோ தொலைத்தனர்
ஓய்ந்த உத்தமர் உறக்கத்தை கலைத்தனர்
போர்த்தர்மம் அறியீரோ பௌத்த பரம்பரையே
மாண்ட வீரரோடா மல்லுக்கு நின்றீர்.

உங்களின் அமைதியை அழித்தனர் பாவிகள்
ஓயாது அலைபொங்க ஓடியே கரைந்தனர்
கிளிநொச்சி கால்களில் மறுபடி பணிந்தது
கிட்டவே பரந்தனும் கைக்கெட்ட வந்தது
ஆனையிறவு அடுத்து அடிபட்டுப் போனது
அங்குலம் அங்குலமாய் அன்னைமண் மீழுது
கொய்திடு மலர்க்காடு கொண்டுவா தீவர்த்தி
நாளை கொடியேற்றி நாயகரை போற்றலாம்.



கலை பண்பாட்டுக் கழகம்
நோர்வே



eelamhouse.com

# 16.01.1993 வங்கக்கடலில் காவியமான

# தளபதி கேணல் கிட்டு

## மற்றும் ஒன்பது வீரமறவர்கள்





பொங்குமாகடலில் ஓயாது
எழுகின்ற அலை போல்...
நெஞ்சமெலாம் நினைவுகளின் ஓசை.
வங்கக்கடல் பிளந்து..
எங்கள், சூரியரைப் புதைத்த
கொடுமையின்
ஆறாத ரணத்தை வருடி...வருடி
ஆற்றவைக்க முடியவில்லை.
நெஞ்சத்தைப் பிழிகின்ற
நினைவுகளுக்கூடே
இறுதியாய் அவர் உரைத்த
விடுதலையின் மந்திரம்...

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**



eelamhouse.com




கல்லறைக்குள் உறங்கும் கண்மணிகாள்!
ஓயாத அலைகளோடு நாம் ஒன்றிவிட்டோம்...
விழிநீரைத் துடைத்துவிட்டு வீதிக்கு வந்துவிட்டோம்!
விரைவில் எங்கள் வானில் விடிவெள்ளி முளைக்கும்!


eelamhouse.com

# கார்த்திகை மலர்களே

கார்த்திகை மலர்களே
சங்கிலியன் தேசத்து
கார்த்திகை மலர்களே.
இலட்சியக் கனவுதனை
நெஞ்சினிலே வரித்தவரே,
வித்தாகிப் போனயெங்கள்
வீர மறவர்களே.
கண்விழித்துப் பாருங்கள்
உங்கள் கனவுகளைச் சுமந்தபடி
அலையெழுந்து வருகிறது.
கோயிலென நாம்தொழுததுங்கள் கல்லறை
உழுதவனின் கதைமுடிக்க
ஓயாத அலையெழுந்து வருகிறது.
நாளதுவும் நீண்டதல்ல,
நீருறங்கும் துயிலில்லம் புதிப்பித்து
மலர்தூவும் நாளதுவும் தூரமில்லை.
கண்ணான எமதுயிர்
மண்ணுக்குள் மணம்வீசும்
கார்த்திகை மலர்களே.
விண்ணதிர வேங்கைபடை
முரசுகொட்டி வருகிறது.
விழிதிறந்து பாருங்கள்-
வெளி வாசல்வரை வந்துவிட்டார்.
கண்கண்ட தெய்வங்களே
கார்த்திகை தீபங்களே நீங்கள்
வேர்விட்ட வழியெல்லாம்
பகை நடந்து செல்கிறதாம்.
சொல்லிவையுங்கள் தோள்நிமித்தி
பயந்தொழிந்த நேரமிதுவல்லவென்று.
பாயவழி பார்த்துப்பதுங்கும் நேரமென்று.
கூசாமல் கூறுங்கள்
பகையேயுன் குரல்வளையை
குறிபார்க்கும் நேரமென்று.

ஸ்ரீமணாளர் எஸ்.பி.சிங்கன் - நோர்வே




eelamhouse.com



**உயிராயுதம்** ஏந்தித்
தன் தாயகம் காக்கும்
தமிழ்வீரனே எங்கள் மாவீரன்!
பயிராகவே அவன் விதையாகிறான்!
வருங்கால இனத்தின் தாயாகிறான்!

இனவாத அரசின்
பெரும்பாதகங்கண்டு
போராட எழுந்தவன் புலிவீரன்!
தனதாருயிர் இனம்
படும் வேதனை கண்டு
தீயாக எழுந்தான் பெரும் போரில்!

சிரிக்கின்ற முகத்தோடு
சிட்டாகப் பறந்து
திரிகின்ற பூஞ்சோலைப் பறவையவன்!
எரிகின்ற தன்தேசம்
மீட்டாகத் தன்னைத்
துறக்கின்ற பெரும் ஞானத் துறவியவன்!

மாவீரனையீன்ற தாயாகிப் பார்! - அவள்
ஆவேசத்தில் எழும் தீயாகிப் பார்!
காய்க்காமற் கருகிடும் பூவாகிப் பார்! - உன்
கரங்களில் வலுஎழும் போராடிப் பார்!

கலை பண்பாட்டுக் கழகம்
பிரித்தானியா

# கரங்களில் வலுஎழும் போராடிப்பார்!



eelamhouse.com

# “அந்தவானம் இந்த பூமி



**2000 ஆண்டு கரும்புலிகள் நாளை முன்னிட்டு தமிழீழத்தில் தமிழ்க் கலைமன்றம் நடாத்திய தமிழ்மொழிக் கலைத்திறன், திறந்தவெளிப் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்ற சிறுகதை.**

**–விக்னேஸ்வரி**

ராம் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கிறான். மதிய உணவு வீட்டிலிருந்து வந்திருந்தும் அதை உண்ண நேரமில்லாமல் அலுவலகத்தில் நிறைய வேலை இருந்திருந்தன. உடல் சோர்வோடு மிதிவண்டியை மிக வேகமாக ஓட்டியபடி பழைய நினைவில் மூழ்கிவிட்டான். செல் சத்தங்கள் நேற்றிலிருந்து மிக மோசமாக இருந்ததால் அவன் தம்பி சந்துருவின் நிழல் மனதை அரித்துக் கொண்டது.

ராம், சந்துரு இருவருமே பிள்ளைகள், அப்பா கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபராக இருந்தார். அம்மாவின் சீதன வீடும் மஞ்சவனப்பதி ஆலயத்திற்கு அண்மையில் அயலவரின் அன்பிற்கும் மதிப்பிற்கும் குறைவில்லை. அப்பா தனிப்பிள்ளையாக இருந்ததால் ஏகப்பட்ட சொத்துக்களுக்கு குறையென்று சொல்ல எதுவுமில்லை. சந்துரு இளைய பிள்ளையாக இருந்ததாலும் சிறுவயதில் மிக சாதுரியமானவனாக இருந்ததாலும் அப்பாவின் செல்லப்பிள்ளையாக வளர்ந்தான். நான் ஐந்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் பொழுது, சந்துரு இரண்டாந்தரம் கற்றுக் கொண்டிருந்தான். அப்போதே பேரன் புக்குரிய எங்கள் அப்பாவை இந்திய இராணுவம் தன் துப்பாக்கி வேட்டுக்கு இரையாக்கியது.

அப்பப்பாவினது துணை மட்டுமே மிஞ்ச அம்மா எங்களை ஒருவாறு படிக்க வைத்துக் கொண்டிருந்தார். அப்பாவின் இழப்போடு எங்கள் சொத்தும், எங்களை நாடும் கூட்டமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கியது. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையுடன் நிலம்புலம் யாவற்றையும் கைவிட்டு இடம்பெயரும் கட்டாய நிலைமையில் கிளாலிப் பயணம் தொடர்ந்தது. ஆரம்பத்தில் கிளிநொச்சி திருவையாற்றில் குடியிருக்கும்போதே கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தற்காலிகமாக எமது படிப்பைத் தொடர, அந்நாட்களிலேயே சந்துரு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டான். இரண்டு தடவை விடுமுறையில் வீடு வந்தவன் முதல் தடவை வந்தபோது தனது வீரசாகசங்களைப் புகழ்வதிலேயே பொழுதைக் கழித்தான். தாத்தா நான் கரும்புலிக்கு பெயர் கொடுத்துவிட்டேன். எனது தாக்குதலில் பெரும் வெற்றியை பெற்றுத் தருவேன் என்று கட்டை விரலை உயர்த்தி வீரம் பேசி விளையாடுவான். தாத்தாவும் சளைக்காமல் அந்த நாட்களில் நாங்களும் பெரிய சண்டியர் தான் என்று தனது இளமைக்கால துடிப்பையும் வீரத்தையும் அவனிடம் கூறி மகிழ்வார். சிறுவயதிலேயே தாத்தா எங்களுக்கு வீரக்கதைகள் சொல்லித்தருவார். தான் பெற்ற மகன் தன் கண்முன்னே சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட குரோத நிகழ்வு அவர் மனதில் வெறித்தனத்தை ஏற்படுத்தியிருந்ததோ என்னவோ தம் பேரப்பிள்ளைகளை தேசப்பற்றுள்ளவர்களாக வளர்க்க எண்ணம் கொண்டிருந்தவர்.

தம்பி இரண்டாம் தடவை விடுமுறையாக வந்தது தாத்தாவின் மரணச் சடங்கிற்கே அப்போதுதான் அவனது உள்ளக்கசிவை என்னால் உணர முடிந்தது. தனது உயிரை துச்சமெனக் கொண்டவன் அம்மாவையும் உடன்





eelamhouse.com

# அழுதால் தான் யே சிரிக்கும்"

பிறப்பையும் மறந்து இயக்கத்திலே துடிப்புள்ள போராளியாகச் செயல் படும் இவனா தாத்தாவின் மரணத்துக்காக இவ்வளவு துன்பப்படுகின்றான் என்று என்னுள் சந்தேகம் பிறந்தது. தன் மனதுள்ளே இத்தனை பந்த பாசங் களைக் கட்டிக்கொண்டும் சொந்த பந்தங்களை மறந்தவனாகப் பாயும் புலி வீரனாக தோற்றமளிப்பவனா இத்தனை கவலை கொள்கிறான் என்று வியப்பாக இருந்தது. இறுதியாக விடைபெற்றபோது ஏழுவயதுச் சிறுவன் போல தன்னை இறுகக் கட்டி முத்தமிட்டுச் சென்றதை எண்ணி ராம் நெஞ்சுருகக் கண்ணீர்விட்டான்.

ஐந்து மைல் தூரம் சைக்கிள் ஓடியே அலுவலகத்திலிருந்து வீடு வந்து சேரவேண்டும்.

சந்திக் கடைக்காரர் அரைகுறையாக தனது கடையைப் பூட்டிக் கொண்டிருந்தார். அவருடன் வேறு ஒரு சிலரும் அந்தக் கடைவாசலில் நின்றிருந்தனர். ராம் வந்து கொண்டிருந்ததை அவதானித்த அந்தக் கடைக் காரர் இரண்டடி நடந்து வந்து அமைதியாக நின்றுகொண்டிருந்தார். மற்றவர்கள் ஊமையாகி நின்றிருந்தனர். அவர்களது கவனமான பார்வை ராம் மனதில் பயத்தை ஏற்படுத்த அவன் செய்வதறியாது என்ன நடந்தது எனக் கேட்கத் திராணியற்று உள்ளூர ஏதோ ஒருவகைப் பயம் குடி கொள்ள ஒழுங்கைக்குள் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு மேலும் ஓட்டிக் கொண்டு வீட்டை அண்மித்தான் வீட்டின் வாசலடியில் சனக்கூட்டம் திரண்டி ருப்பதை அவன் கண்கள் உணர அவன் உடல் விறைத்தது. அம்மா இன்று காலை ஏதோ சோர்வுடன் இருந்தவ நான் எதுவும் விசாரிக்காமல் வந்து விட்டேன். என் அம்மா என்று ஓலமிடவேண்டும் போல இருந்தது. மிக வேகமாகவே சைக்கிளை ஓட்டிக்கொண்டு வாசலடியை அடைந்தான். அம்மா முற்றத்தில் உயிரோடுதான் இருந்தா. தலைவிரி கோலமாக தலை யில் அடித்தபடி அலறிக் கொண்டிருந்தா. அயலவர் கூட்டம் கூடிக் கொண்டி ருந்தது. செய்தி சொல்ல வந்திருந்த போராளிகள் நின்று கொண்டிருந்தனர். இதுவரை தூரமும் என் மனதுள்ளே நிழலாடிய என் தம்பிக்கு ஏதோ நடந்துவிட்டதை என்னால் உணரமுடிந்தது.

அலறியபடி என் தம்பி எங்கே என் தம்பி என்று தேடினேன். அவனின் வித்துடலில் முகம் புதைத்து அழவேண்டும் போலிருந்தது. அவன் செல்ல முகத்தைத் தடவிக் கொஞ்ச வேண்டும் போல் இருந்தது. ஆவலோடு அலறியபடி போராளிகளின் கரங்களைப் பற்றியபடி கேட்டான், அவர்களால் பதில் கூறமுடியாமல் போனது.

அவனது உடலைப் பார்க்க முடியாது, நேற்று சாவகச்சேரி மினிமுகாம் தாக்குதலில் கரும்புலியாகப் பாய்ந்து நூறுவீத வெற்றியை தந்துவிட்டான் என்று ஆதரவோடு அயலவர் ஒருவர் கூறியது அவன் காதில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அவனது முகத்தைப் பார்க்க முடியாது தொட்டுப் பார்க்க முடியாது வெளிவிட்டுச் சொல்ல முடியாத ஏக்கப் பெருமூச்சு மட்டுமே வெளிவந்தது அவனிடமிருந்து.

அப்போது கருமேகம் கூடி ஒரு சில மழைத்துளிகள் அவனுடலில் பட்டுத்தெறித்தது. அவன் கண்களில் இருந்தும் கண்ணீர் கொட்டியது.

வானம் அழுதால்தான் இந்தப் பூமியே சிரிக்கும் இந்தவரிகளின் அர்த் தம் அவன் தம்பி வாழ்விலும் நிலைத்திருப்பதை உணர்ந்தான் ராம். வானத் தைப் போன்ற சில மனிதர்களின் தியாகத்தால்தான் எம்தேசம் விடியும் என்ற உண்மையை அவன் தன் மனதில் திடமாக உணர்ந்தான்.

வானத்திலிருக்கும் தன் தம்பியின் வேண்டுதல் நிறைவேற ராமும் வானத் தில் உருளும் கருமுகிலாக தன்னையும் இணைத்துக் கொள்ள எண்ணி னான். நாளை விடியப் போகும் தேசத்திற்காக வீறுநடை போட்டுக் கொண்டான்.

## மாவீரர் பணி தொடர்வோம்



மாவீரர் பணி தொடர்வோம்
சந்தனக் குமிழெடுத்து வா தோழா
களத்திடை கயவரை கலங்கடிக்கும்
காவு கணை கரும்புலிக்கு பொட்டிடுவோம்

குங்குமச் சிமிழ் கொண்டு வா தோழா
எதிரி தலை கொய்துவரும்
புலித் தங்கைக்கு வீரத்திலகமிட்டிடுவோம்

பொன்னாடை கொண்டு வா தோழா
போரில் வெற்றி வாகை சூடி வரும்
புலித் தலைவனுக்கு போர்த்தி நாம் மகிழ்வோம்.

மலர் பறித்து வா தோழா
மண்ணுக்காக மரணித்த-மாவீரர்
கல்லறை தொழுது அவர் பணி தொடர்வோம்.

- அ. அன்ரனி
தமிழீழம்.


eelamhouse.com

# ஒரு நாள் இரவின் கவிதையும், கதையும்...

எங்களூரில்....
கார்த்திகையில் ஒரு நாள்
அந்த இரவில், அந்த நேரத்தில்
காற்றுமட்டுமே வீசும்
மணி ஓசை கேட்பதற்கும்
சுடர் எரிவதற்குமாய்.
இல்லையேல்
அதுகூட ஒரு நிமிடம்
நின்றுதான் வீசும்
மாவீரனின் மகத்துவம் புரிந்து.

இரவு நேரம் துவிச்சக்கரவண்டிகளில் நண்பர்களுடன் நானும் வீதி வீதியாய், ஒழுங்கை ஒழுங்கையாய்... எங்கெல்லாம் தீபங்கள் தெரிகிறதோ அங்கெல்லாம் செல்வோம். எங்கெல்லாம் மின்னொளி தெரிகிறதோ அவ்விடமெல்லாம் நாம் செல்வோம்; அங்கெல்லாம் சிரித்தமுகமாய் மாவீரர் படங்கள், மணம்வீசும் மலர்கள், மாலைகள், அஞ்சலி செய்யும் மக்கள்.

நண்பர்கள் சேர்ந்தால் எத்தனை பம்பல் ஆனால் அன்று மட்டும் மௌனங்களே விரியும், மனங்களே பேசும். நாங்கள் மட்டுல்ல, எல்லோருமே அப்படித்தான் அன்று.

துயிலும் இல்லம்...
சந்தனம் சுமந்துவரும் தென்றல்
உணர்ச்சிப்பிரவாகம்
கரைபுரண்டோடும்
மெய்மறந்து போகும்
நாதமொலிக்கும்
சுடரொளிமட்டுமே
தேசத்தை நிறைக்கும்
ஆன்மாக்கள் அவர்களுடன்
சங்கமிக்கும்.

பலமைல் பயணத்தின் கிழக்கே தெரியாது. வந்த இடத்திலே நிமிர்ந்து நிற்போம் நாம் மட்டுமல்ல, எல்லோருமே அப்படித்தான். சிரம்பணியும் விம்மல்கள் எங்கும் ஒலிக்க கன்னத்தில் விழிநீர் கோடுகள் வரையும். துப்பாக்கி இருப்பின் கைகள் இறுக்கிப்பிடிக்கும். பிஞ்சுகளும் பூக்களுடன் செல்லும் இந்தநாளிலேயே நான் இறந்துவிடக்கூடாதா என நெஞ்சு துடிக்கும். நெஞ்சை இறுக்கும் உறுதியின் குரல் ஒலித்துப் பின் விடிவிற்காய் அடிவானம் வெளுக்க நம்பிக்கையுடன் மீண்டும் எம் பயணம் தொடரும்.

அந்த நாள் எம்மில் என்றும் நிலைக்கும்.

நாதவலை - மனோரஞ்சிதன்-




eelamhouse.com

# சுதந்திரக் கனவு...

ஓ...மாவீரர்களே !
நீங்கள் உறங்குவது
கல்லறையில் அல்ல
வீரவரலாற்றுப் புத்தகத்தில் !

நாளைய சந்ததியின்
பார்வையால் படிக்கப்பட்டு
பாதுகாக்கப்படும் சங்கதிகள் !


நீங்கள் உறங்குமிடம்
மயானம் அல்ல
வாசகர் சாலை !

உங்கள் வாசலுக்கு
வரும் நாங்கள்
உணர்ச்சி பொங்க
புரட்சிக் கவிதைகள்
வாசித்துப் போகிறோம்
வீட்டுக்கல்ல
களத்தின் வாசலுக்கு !

உங்கள் சுதந்திரக்
கனவு ஒரு நாள்
நனவாகும்.

எங்கள் உதிரத்தோடு ஒன்றாகிப்
போன உங்களின் இறுதி
இலட்சியம் சத்தியமாய்
தமிழ் மக்களின் காரிருள்
வானமதில் சுதந்திரத்
தீபம் ஏற்றி தேசப்பரப்பெங்கும்
பிரகாசிக்கும் !

அப்போது நீங்கள்
வருவீர்கள் ! எங்கள்
வானம் பூமழை பெய்து
உங்களை வரவேற்கும் !



கலை பண்பாட்டுக் கழகம்
ஜேர்மனி



eelamhouse.com

# மாவீரர்கள் பிரசவிக்கும் மாவீரமும்



மாவீரர் நாள் இன்று. வீரர்கள் உறங்குகின்ற துயிலும் இல்லத்தில் மக்கள், உணர்ச்சிப் பிழம்புகளாக உருவெடுத்து, சாதாரணர்களாகப் பிறந்து, மாவீரர்களாகிவிட்ட இளம் வீரர் கல்லறைகள் அருகே கண்ணீர்ப் பூக்களை இதயத்திலிருந்து சொரிகின்றனர்.

இந்த மனிதத் தெய்வங்களின் உயிர்க்கொடையின் உன்னதத் தன்மை பற்றி அகத்தில் எழுந்த தியாகக் கனலை அணையவிடாது, இந்த இளைய வீரருக்காக ஓரிரு வரிகளை எம்காணிக்கை கலந்து கல்லறை மீது வைக்கின்றோம்.

பிறப்பும் மரணமும் மாறிமாறி சுழன்று வரும் இயற்கை வாழ்வின் வட்டத்திற்குள் ஒரே மாதிரியாக வாழ்ந்து வாழ்ந்து பின் மடிகின்ற சாதாரண வாழ்வோட்டத்தில் நின்றும் விலகி தாம் வாழ்கின்ற வாழ்வின் காலத்தை ஓர் யாகமாக்கி தாமே ஆகுதியானவர்கள் மாவீரர்கள்.

இவர்கள் சாதாரண மனிதர்களில் இருந்தும் வேறுபட்டவர்கள். உள்ளத்தில் தாயகத்தின் மீது கொண்ட பற்றும், எமது மக்கள் மீது கொண்ட பாசமும், தமிழ் மொழி மீது கொண்ட காதலும் அதற்குத் தம்மையே முழுமையாகக் கொடுத்த கொடையாலும் எம்முடன் வாழ்ந்த இவர்கள் மாவீரர்களாக நிமிர்ந்து நிற்கின்றார்கள். சாவு என்கின்ற உடல் இயக்க சக்தி இல்லாமற் போகின்ற மாற்றத்தைக் கண்டு மனிதன் அஞ்சுகின்றான், அழுகின்றான். தான் நீண்ட காலம் வாழ வேண்டும் என எண்ணி, அதற்கு ஆவல் கொண்டு வாழ்க்கை ஓட்டத்தில் சிக்கித் தடுமாறி இந்த உயிர் வாழ்க்கை ஒன்றே அவனது சர்வ இலட்சியமாகத் துலங்குகின்றது. உயிர் வாழும் ஆசை அவனுக்குப் பயம், தன்னலம், என்ற இரண்டையும் மனதுள் உருவாக்கி தான், தனது என்று தன்னைச் சுற்றி ஒரு குறுகிய வட்டத்தைப் போட்டு தனது சுயத்தின் பிடிக்குள் தானே சிக்கிவிடுவான். இந்த மண்ணைவிட்டுப் போகும் வரை இந்த அச்சமும் ஆசையும் அவனை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும். மரணம் நிச்சயம் என்று தெரிந்திருந்தும் அதை எதிர் கொள்ளும் வீரமும், ஓர்மமும் தன்னுணர்வில் வாழுகின்ற சாதாரண மனிதனுக்கு இல்லை.

ஆனால் மாவீரர்கள் அப்படிப்பட்டவர்களல்ல, தோற்றத்தில் சாதாரண மனிதராக வெளிப்படுகின்றபோதும் அகத்தில் எழுகின்ற இலட்சியக் கனலின் வீச்சால் அவர்கள் உன்னத புருசர்கள்.

உலக வாழ்வின் வட்டத்திற்குள் சிக்காது வாழ்வின் அர்த்தம் தேடும் ஞானிகள், முனிவர்கள், துறவிகள் போல தமது முக்திக்காக சமூகத்திலிருந்து விலகி



eelamhouse.com

# மாவீரம் படைக்கின்ற மாவீரர்களும்

நின்று காட்டிற்குள் ஒதுங்கியவர்கள் அல்ல மாவீரர்கள். மக்களோடு மக்களாக நின்று அவர்களின் துன்பத்திலும், கண்ணீரிலும், உதிரத்தாலும் ஒன்றாக இணைந்து நின்று தாமும் அவர்களோடு சிலுவை சுமந்தவர்கள் மாவீரர்கள். தமது உடல், உள்ளத்தை தாக்குகின்ற அனைத்து வலிகளையும் மக்களை விட அதிகமாக மக்களுக்காகத் தாங்கிக் கொண்டவர்கள். இவர்கள் சாதாரண மனித வாழ்க்கை வாழ்ந்து ஆனால் அவர்களைவிட மேலான ஞான வாழ்வு தந்த வழிகாட்டிகள் மாவீரர்கள். எமது மக்கள், எமது அயலவன், எமது உறவுகள் துன்பப்படுகிறார்கள், அடக்கப்படுகின்றார்கள், அழிக்கப்படுகின்றார் கள் எனவே இதற்குத் தன்னால் ஏதாவது செய்யப்பட வேண்டும் என்ற ஆன்ம வேட்கையால் தமது உயிரைக் கொடுக்கும் மனப்பக்குவமானது அனை வரிலும் உயர்ந்த வடிவில் அவர்களை நிலைக்கச் செய்திருக்கின்றது. இவர் களை ஆட்கொண்டுள்ள இந்த தேசபக்தியை, மக்கள் நேசத்தை உள்ளுணர் வின் உருவத்தை எந்த மொழியின் வரிவடிவங்களாலும், கலை விழுமியங் களாலும் முழுமைப் படுத்திவிடமுடியாது. இது உள்ளத்தின் ஆழத்தால், ஒரு மைப்பாட்டால் உணர மட்டுமே ஆகிவிட்ட ஒன்று. நாம் ஓர் உண்மையான தூய்மையான போராளியாக வாழ்ந்து செயற்பட்டாலன்றி இந்த வீரர்களின் ஆன்ம தாகத்தை விளங்கிக் கொள்ளமுடியாது. ஆனால் இந்த விடுதலைக் கனல் ஒரு வீரனில் இருந்து மறையாது மற்ற வீரர்களைப் படைக்கின்றது. அது சங்கிலித் தொடர்போல மக்களையும் இணைத்துச் செல்கின்றது.

மொழியால் இவர்களின் விடுதலைத்தாகத்தை அளவு காட்ட இயலாத நாம் எம் அகங்களைத் திறந்து அமைதி காத்து அந்த அமைதியில் தோன்றும் அளவால் அவர்கள் அன்பை உள்ளுணர்ந்து வணங்குவோம். அந்த வணக் கத்தால் கிடைத்த சக்தியை எம் தேசம் வலுப்பெற ஆற்றுகின்ற பணிகளுக்கு உரமாக்கி, பேரினவாதத்தின் பெயராலும் அதிகாரத்தின் பலத்தாலும் எமது தேசத்தை அடிபணிய வைக்க எண்ணும் ஆணவத்தின் உச்சியிலாடுகின்ற உலக வல்லரசு சக்திகளை வென்று எம் சுதந்திர தமிழீழத்தை மாவீரர்களின் ஆன்மாக்கள் அமைதிபெறும் தன்னிகரற்ற தேசமாக்குவோம். மாவீரர் ஆன்ம தாகத்தை நிறைவேற்றுவோம்.

**கலை பண்பாட்டுக் கழகம்**
**இத்தாலி**





eelamhouse.com

# புயலென நெருப்பென..




செந்நீர் சொரிந்து செருக்களம் மீதிலே
சிங்களப் படைகளைச் சரித்து விழ்த்திச்
சன்னதமாடி நின்ற எம் சரித்திர விரர்களே,
கண்ணீர் சொரிதலோ, கவலையுள் புதைவதோ
உங்களுக்கான அஞ்சலி அல்ல.
விண்ணதிர விரைந்து எழவேண்டும்.
விடுதலை என்ற உன்னதம் வென்றிட
மண்ணில் நிமிர்வுடன் எழவேண்டும்.
ஆதிக்கக் கதை முடிக்க அச்சமின்றி
எழுவது ஒன்றே உங்களுக்கான
உண்மை விர வணக்கம் ஆகும்.

மாவிரர்களே, எம் தேசத்து மகோன்னதங்களே!
நேற்று வரை எங்களைப் போன்றே
காலையில் எழுந்தீர்கள்– புத்தகம் காவிப்
பாடசாலைக்குச் சென்றீர்கள்.
சைக்கிளில் ஊரெல்லாம் உலா வந்தீர்கள்.
காதலென்ற தேரேறி கவலை மறந்திருந்தீர்கள்.
எப்படி வந்தது பின்னர் இப்படியான
ஒரு ஈகம் உங்களுக்கு
எப்படி வந்தது எழுத முடியாத
ஒரு வீரம் உங்களுக்கு.
எரிமலை ஒன்றை உங்களுக்குள்
விதைத்த விரியம் எது.
எங்கள் தானைத் தலைவன்
காட்டிய திசையில் பாய்ந்து
புயலென நெருப்பென சமர்க்களம் ஆடிய
எல்லைச் சாமிகளே
நாளும் உமைத் தொழுவோம்.
நீரின்றி வேறு தெய்வம் நாமறியோம்.
இனி இனி எழுந்திடும் எம் தலைமுறையனைத்தும்
உம்மைக் கைகூப்பி வணங்கி நிற்கும்.

கலை பண்பாட்டுக் கழகம்
டென்மார்க்


eelamhouse.com

# கார்த்திகை 27

எழு எழு எழுவென
தமிழன் எழுவது
கார்த்திகை இருபத்தியேழில்- அவன்
ஆழ்மன விடுதலைப்
பற்றுதல் உயிர்ப்பது
கார்த்திகை இருபத்தியேழில்.

இருளது அகன்று
ஒளியது தோன்றும்
கார்த்திகை இருபத்தியேழில்- மனச்
சிறைகள் தகர
ஆன்மம் விழிப்பது,
கார்த்திகை இருபத்தியேழில்.

உள்மனம் உருகி
விழிவழி வழிவது
கார்த்திகை இருபத்தியேழில்- அவர்
அற்புத நினைவில்
மனவிருள் அகல்வதும்
கார்த்திகை இருபத்தியேழில்.

இனமென நிமிர்வதும்
இடைவெளி தகர்வதும்
கார்த்திகை இருபத்தியேழில்- இன
விடுதலைக் குழைப்பது
சிந்தையில் நிறைவது
கார்த்திகை இருபத்தியேழில்.

புதைந்தவர் விளைவதும்
விளைந்தவர் நிமிர்வதும்
கார்த்திகை இருபத்தியேழில்.
விதைந்தவர் கல்லறை
கற்பம் தரிப்பது
கார்த்திகை இருபத்தியேழில்.

அடிதொழும் இனமெனும்
அவலத்தைப் போக்கியோர்
கார்த்திகை இருபத்தியேழில்- அவர்
மலரடி தொழுதிட
மலர் கொண்டேகுதல்
கார்த்திகை இருபத்தியேழில்.

நெய் விளக்கேற்றலும்
நினைவொலி எழுப்பலும்
கார்த்திகை இருபத்தியேழில்.
நிர்மலம் ஆனவர்
திருவடி சேர்வது
கார்த்திகை இருபத்தியேழில்.



-ஜெயா பிரான்ஸ்-


eelamhouse.com

# களமும் வாழ்வும் காலத்தி



முதல் எல்லைப்படை பெண் மாவீரர்
ரதி / சாந்தி

-சுதாமதி-

வீதிகளில் அவசரமாகப் போய்க் கொண்டிருக்கும் அந்தப் பெண்களின் கைகளில் மாதிரித்துவக்கு. வீசிவீசி நடக்கும் கைகளில் உறுதி. கால்களில் வேகம் சிலர் சேலைகளுடனும் சிலர் பாவாடை, சட்டை என்ற வழமையான உடைகளுடனும் போய்க்கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வு இன்று நேற்றல்ல, ஒரு வருடத்துக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏன் இப்போது வாழ்க்கையில் இயல்பாகிவிட்ட நிகழ்ச்சி. நாளாந்தம் தமது வாழ்க்கைக் கடமையில் ஒன்றிப் போனதைப் போல இவர்கள் பயிற்சியெடுப்பதும் பின்னர் வீடுதிரும்பி குடும்பத்தோடு வாழ்வதும் குழந்தை குட்டிகளோடு உண்டு, உறங்குவதும் வழமையாகிவிட்டது.

கிராமத்தில் எல்லைப்படை, கிராமியப்படை, ஊர் காப்புப்படை என்று பெண்கள் போராட்ட சக்தியாக மாறிவிட்ட காலம்.

எப்படி முடிந்தது இவர்களால்? எவ்வாறு முடிந்தது இந்த மாற்றம். காலமாற்றம். வாழ்க்கையின் தேவை.

இல்லை வாழ்க்கையே போராட்டமாகிவிட்ட காலத்தின் தேவை. இந்தக்காலகட்டத்தின் தேவையை மக்கள் புரிந்து கொண்டனர். எமக்கேயான வாழ்க்கை என்று ஏற்றுக்கொண்டனர். அதுதான் உண்மை.

முந்தியொரு காலப்பகுதியில் நினைத்துப் பார்க்க முடியாத நிகழ்வு. அண்ணனின் அணியில் இணைந்து கொண்ட தங்கைகளைப் பார்த்து உலகம் வியந்தது ஒரு காலம். அந்தத் தங்கைகளின் சுவடுகளைப்பற்றி இப் பெண்களும் எல்லைகாக்கப் புறப்பட்டனர் இக் காலகட்டத்தில்.

ஓயாத அலைகள் மூன்றில் ரதி/சாந்தி என்ற எல்லைப்படை பெண் ஒருத்தி இந்த மண்ணுக்காகத் தன்னை வித்தாக்கிய நிகழ்வினை இந்த ஊரும் உலகமும் அறியும். இந்த நிகழ்வின் மூலம் உலகத்துக்கோர் புதிய செய்தி எம்மண்ணிலிருந்து சொல்லப்பட்டது. மீண்டும் பெண்களிள் எழுச்சி. எமது போராட்டமும் எம் தலைவனின் வழிநடத்தலும் பிறப்பித்த அக்கினிக்குச்சொன்றின் இன்னொரு பக்கத்தின் அறிமுகம். இந்த அறிமுகத்தைக் கொண்டு பெரும் கதை தொடர்கிறது.

எதிரியால் ஊர்விட்டு ஊராய், பிரதேசங்கள் கடந்து பிரதேசங்களாய் துரத்தப்பட்ட மக்கள். சகோதரனை, கணவனை இழந்த பெண்கள் இன்னும் சிங்கள இராணுவத்தின் கொடிய மிருகவெறியால் சிதைக்கப்பட்ட இளையவர்கள், மழலைகள், பிஞ்சுகள் ஊரில் தீயெரிய கொடுமை கண்டு பொங்கியெழுந்தான் தமிழன். ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் போராட வேண்டிய காலத்தினை உணர்த்தின, எம் தேசத்தில் நிகழ்ந்த அவலங்கள்.

'அவலத்தைத் தந்தவனுக்கே அதைத் திருப்பிக் கொடு' என்ற வேங்கைத் தலைவனின் சொல்லை வேதமாக்கி எழுந்தது மக்கள் அலை. அந்த அலை ஓயாத அலைகள் மூன்றில் பெரும் வேகமெடுத்தது.

ஊரூராய் அம்மாவும் அக்காவும் தங்கையும் கைகளில் ஆயுதம் ஏந்தினர். எம் தாய் மண்ணின் எல்லைகளில் எல்லைகாக்கப் புறப்பட்டனர். சண்டைக் களங்களில் நின்றனர்.

ஓயாத அலைகள் மூன்றில் உக்கிர சண்டைகள் நடைபெற்ற நாட்களில் நெருக்கடியான இடங்களிலெல்லாம் எமது எல்லைப்படைப் பெண்களும் நின்றனர்.

ஒரு மாதம், சில நேரங்களில் ஒரு கிழமை களத்துக்கு, எல்லைக்கும் புறப்பட்டுப் போயினர், மீளவும் வந்தனர். குடும்ப வாழ்கை, பயிற்சிகள் மீண்டும் சில நாட்கள் களவாழ்கை. இப்படியாக இரு வேறுபட்ட சூழ்நிலைகளைச் சந்திக்கும் இவர்கள், எம்மண்ணின் அவலத்தைப் புரிந்து கொண்டனர். தாயகத்திற்காகச் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்து கொண்டனர்.

போராளியாகின்ற தன்மையிலும் எல்லைப்படைப் பெண்களின் வாழ்வும் மாறுபட்டது. போராளிகளைப் பொறுத்தவரை முற்றுமுழுதாகவே தன்னை இப் போராட்டத்தோடு, இப்போராட்டத்தின் கட்டுக்கோப்போடு இணைத்துகொண்டவர்கள் ஆவார்கள். ஆனால் எல்லைப்படைப் பெண்களைப் பொறுத்த வரை இன்று தமது வாழ்வை இந்த மண்ணின் இயல்போடு பின்னிப் பிணைந்து வாழ்வதும் நாளை அதற்கு முற்றிலும் முரண்பட்ட சூழ்நிலைகளைச் சந்திப்பதுமாக இருவேறுபட்ட வாழ்வை முகம் கொள்ளவேண்டியிருந்தது. இன்று ஊர்க்கோயிலின் திருவிழாவிலோ அல்லது கோலாகலமான திருமணநிகழ்விலோ காணும் ஒருவரை நாளை எல்லையில் சந்திக்கலாம் அல்லது களமொன்றின் பகுதியிற் சந்திக்கலாம். இதுவே இவர்களின் வாழ்கை முறைமையாய் அமைந்தது.

களமும் வாழ்வும் முரண்பட்டனவே தவிர, இவர்கள் தங்களுக்குள் முரண் ஆகவில்லை. இந்த முரண்பாடான வாழ்க்கைக்கு முகம் கொடுத்தனர். அதனை முகம் மலர வரவேற்றனர்.

இந்த வாழ்க்கை முறையை, குடும்ப உறவுகள் ஏற்றுக் கொண்டன. ஏன் இவர்கள் களங்களுக்குச் சென்றபோதோ, எல்லைகாக்கப் புறப்பட்டபோதோ உறவுகள் விடைகொடுத்து அனுப்பிவைத்தன. இவர்களின் குடும்பச் சுமைகளைப் புரிந்துகொண்டன. ஒரு குடும்பத்திலிருந்து எல்லைகாக்கவென தாயும்

eelamhouse.com

மகளும் சென்ற சந்தர்ப்பங்களும்கூட நிகழ்ந்தன.

சாதாரண பெண்ணொருத்தி தன்னைச்சுற்றிய உலகமாக வரித்துக்கொண்ட குடும்பம், பாடசாலை வாழ்க்கை, கல்வி நிறுவனங்கள், வேலைத்தலங்கள் என்ற நடமாட்ட எல்லைகளோடு களத்தையும் சந்திக்கத் துணிந்த நிகழ்வின் மிகப்பெரிய தன்மை, யுத்தம் எம்மண்ணுக்கு ஏற்படுத்தியதன் விளைவு, எதிரியின் யுத்தத்துக் கெதிராக எமது போராட்டம் வழிவகுத்துக் கொடுத்த பாதை.

எமது போராட்டமே பெண்களின் மனமாற்றத்தை, ஏன் சமூகத்தில் மனமாற்றத்தை ஏற்படுத்தியது என்பதே உண்மையாகும்.

இந்தப் பாதையிலேதான் பல பெண்கள் நடந்து வருகின்றார்கள். வீட்டுக்காகவும் நாட்டுக்காகவும் உழைக்கும் இப்பெண்கள் சராசரியான சமூக வாழ்வுக்குக் கட்டுப்பட்டவர்கள். பலர் தமது உழைப்பின் வருமானங்களை குடும்பத்துக்காக செலவிட வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள். இருந்தும் வீட்டுக்காக உழைக்கும் அதே கரங்கள் எல்லைகளில் ஆயுதம் தாங்கி நிற்பது, எமது தாயகத்தின் மீது இவர்களுக்குரிய கடமையை உணர்த்துகிறது, புரிந்து கொண்ட தன்மையைச் சொல்கிறது.

'எல்லை காக்கவாவது போய்வர வேணும் அம்மா. அக்காக்கள் அண்ணாக்கள் ஆமியோடை சண்டை பிடிச்சுக்கொண்டு நிக்கிறதால தானம்மா நாங்கள் இஞ்சை நிம்மதியா வாழுறம்'

பரந்தன் உமையாள்புரத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் எல்லைப்படை பெண் மாவீரர் ரதி/சாந்தி தமது தாயாரிடம் அடிக்கடி கூறிக்கொள்வது இதைத்தான். வீட்டின் முழுப்பாரத்தையும் தன் தலையிலேயே சுமந்து கொண்டு நாட்டுக்காகப் போராட வந்த இப்பெண்ணின் சாதனையும் எமது வரலாற்றின் பதிவுகளில் புதிய கதையாய் விரியும். முதற்களப்பலியான 2ம் லெப் மாலதியைப் போல, இந்திய வல்லாதிக்கத்தின் கொடுமைக்கெதிராக உண்ணா நோன்பிருந்து முதல் வீரச்சாவைத் தழுவிய அன்னை பூபதியைப்போல, ரதியும் எமது வரலாற்றுக்குள் வாழ்வாள்.

# ன் தேவை

# விடிவுக்காய் உரமாகிப்போனோர்

தீட்டிய கூர் இடை– பொறியென
மூட்டிய தீயாக எழுந்தனர் வேங்கைகள்
ஊறு விளைவித்த உதிரிகள் ஒறுக்க
வீறு கொண்டெழுந்த வேங்கைகள் வேந்தன்,
ஒளியிடைத் தலைவன் விழி நோக்குணர்ந்து
ஊழிப் பெருக்கெடுத்து சென்றவர் மாவீரர்!
செருக்களத்திலே செங்களமாடி– வீணரைச்
சருகாக்கி மண்ணுள் வித்தாகிப் போனவர்
ஆழி சூழ் ஈழமதில்– இடறித்திரிந்த
இழிவு செய் சிங்கள ஓடப்படைதனை
வெடியால் இடித்து
இருளோடு போனவர்–இளைய
செடியான அவர் வாழ்வு
வேர்விட்டு விருட்சமானது– தமிழர்
காரிருள் போக்கிட
நெய்யாகி உருகியெரிந்தவர்க்கு
கார்த்திகைத் திங்கள் இருபத்தியேழில்
நெய்விளக்கேற்றுவோம்.

–லிங்கம் பிரான்ஸ்–




eelamhouse.com

அமுதா!
நீயே ஒரு வரலாறு
பின் உன்னைப்பற்றி நாமென்ன எழுத?
உன்னை நீயே
ஒரு கவிஞராக
கதாசிரியராக
கட்டுரையாளராக
ஓவியராகச் செதுக்கிக்கொண்டதால்
எம் பேனாக்கள்
வேலையற்றுப் போயின.
உன் பேனாவே
உன்னைப் பேசட்டும்
உனது தூரிகையே
உன்னைத் தீட்டட்டும்
தேசியத் தலைவர் முன்
தேசத்து மக்கள் முன்
ஒலித்த உன் கவிவரிகள்
சில இங்கே அரங்கேறும்

-உன்னோடிருந்தவர்கள்.

**கூவி** வரும் எறிகணைச்
சிதறல்களோடும்,
குண்டேந்தி விழும்
எம்மினிய தோழர்களோடும்,
தினம் உறவாடினோம்.
அவர்களின்
இறுதி மூச்சிலும்,
உறுதியான பேச்சிலும்
சுருதி தேடிக்
குருதியிலே நனைந்து
கவிதேடினோம்.

மனதின் மூலையில்
ஒவ்வொரு கணமும்
ஊற்றெடுக்கும் கற்பனைத் துளிகளை,
சரங்களாய் தொடுத்துக்
கொண்டு வந்திருக்கிறேன்.
வணக்கம்!
என்னை ஏற்றமுடன் நிற்கவைத்த
எம் தலைவருக்கு வணக்கம்,
வந்தோருக்கும் வணக்கம்.
இந்த மேடையும்,
இங்கு வந்து நான்
வணக்கம் சொல்வதும்,
எங்கள் கவிதையை
உங்கள் முன் நாங்கள்
நின்று பகர்வதும்,
எங்களுக்குப் புதிது.
இலக்கணங்களோடும், இதிகாசங்களோடும்
நாங்கள் உறவாடியதில்லை.
ஆனால்,
தினம் கேட்கும் வேட்டுக்களோடும்
கூவிவரும்
எறிகணைக் கூவல்களோடும்,
சினேகித்துக் கொள்ளும்
எங்கள் கவிகளுக்கு
துப்பாக்கி முனைகள்தான்
புல்லாங்குழலிசைக்கும்.
வெடிப்பு முழக்கமே
மிருதங்கமாகும்.
குருதியின் சிதறலே
சுருதியாயிருக்கும்.
மொத்தத்திலிங்கே
இலக்கணங்களுக்கு
இடமே இல்லை.
உண்மைகளை...
எங்களுணர்வுகளை...
உங்களிடம்
உரிமையுடன் சொல்கின்றேன்.
கனவல்ல தமிழீழம்
நாளை நம்நாடு.

கனவுகள் சுமந்து
கல்லறையில்
காத்திருக்கும் கண்மணிகளே,
வெள்ளையடிக்கப்பட்ட
உம்கல்லறை முதுகுகளில்
முகவரி எழுதியபோதும்,
உம் முன்னே நின்று
நாம் தீபங்கள் ஏற்றிய போதும்,
பூமாலை கட்டி
புஸ்பித்த போதும்
உறுதியெடுத்துக் கொண்டோம்,
கனவல்ல தமிழீழம் நாளை நம்நாடு.
மாவீரர்களே
மரணமுங்களைத் தழுவிக்கொண்ட போதும்
நீங்கள்
வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.
சிலர் வாழும் போதே



01.04.2000 அன்று ஓயாத அலைகள் -3 நடவடிக்கையின்போது இயக்கச்சிப் பகுதியில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் அமுதாவால் வரையப்பட்ட ஓவியம்.

செத்தவர்களாகிறார்கள்.
மாண்டுவிட்ட போதும்,
வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் நீங்கள்.
சொல்லுகின்றோம்,
ஏனென்றால் - உம்
உடல்களை மட்டும் தான்
மண்ணுக்குள் விதைத்தோம்.
உம் உணர்வுகளையெல்லாம்
எம் மனங்களிலே விதைத்தோம்.
உம் இலட்சியங்களையெல்லாம்
எம் பாதையிலே இணைத்தோம்
உம் கருவிகளை- எம்
கைகளிலே எடுத்தோம்.
மொத்தத்தில்,
உங்களைச் சுமந்தபடி
நாங்களிருக்கின்றோம்.
எங்களோடு நீங்கள்
வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.
உங்கள்
காதோடு சொல்கின்றோம்
காத்திருங்கள்...
கனவுகளாய்
நீங்கள் சுமந்தவற்றை,
நினைவுகளாய் சுமந்து
சொல்கின்றோம்
கனவல்ல தமிழீழம் நாளை
நம்நாடு.

கண்ணிமைக்க மறந்து
காத்திருந்து நீர்
விசைவில் இழுத்தபோதும்.
உம் உணர்வுகளை எல்லாம்
கவிதைகளாக்கி
கதை சொன்ன போதும்,
முட்புதர்களுடே
இரத்தம் சொட்டச் சொட்ட
கால்வலிக்க நீர்
இலக்குகள் நோக்கி
நடைபயின்ற போதும்,
உம் மனத்திரையில் விரிந்த
அத்தனையும் கனவல்ல.
குண்டுபட்டு நீர்
சுருண்ட போது
சொன்ன வார்த்தைகளைச்
சுமந்து சொல்கிறேன்
கனவல்ல தமிழீழம்
நாளை நம்நாடு.

eelamhouse.com

# கனவல்ல தமிழீழம் நாளை நம்நாடு

இரத்தமும் தசையுமாய்
கசங்கிய மலர்களாய்
உங்களை நாங்கள்
கையணைத்த போதும்,
தூரத்தில் உங்களின்
வெடியோசை எங்களின்
காதைத் தொட்டபோதும்,
கடைசியாய் நீங்கள்
முகவரி இல்லாமல்
கரைந்து போனபோதும்
மௌனமாய் நீங்கள்
சொன்ன வார்த்தைகள்
எதிரொலிக்க
ஊமையாய் நாங்கள்
உள்ளே குமுறியபோதும்,
உறுதி எடுத்துக் கொள்கிறோம்
கனவல்ல தமிழீழம் நாளை நம்நாடு.

ஊரிழந்து உறவிழந்து
ஊனின்றி உறக்கமின்றி
மரநிழலே தஞ்சமென்று
அந்தரிக்கும் எம்மக்கள்,
நாவிழந்து நாதியற்று
இனவெறியின் கரங்களிலே
சிக்குண்டு சிரழியும்
எம்மக்கள் எம் குடும்பம்
நிலை நினைக்க மனங்கொதிக்கும்.
தோள்களிலே உரமேறும்.
கால்களிலே புது வேகம்
பிறப்பெடுக்கும்.
களம் நோக்கி கால்நடக்கும்.
கண்சிவக்க கனல்பறக்கும்.

கொதிக்கும் மனதுடனே
சொல்லி வைக்கின்றேன்
எம்மக்காள்,
காத்திருங்கள்
விரைவில்...
கனவல்ல தமிழீழம் நாளை நம்நாடு.

இனவெறி பிடித்த
சிங்கக் கரங்களின்
உடல்வெறியாட்டத்தால்
கசக்கிப் புதைக்கப்பட்ட
கிருஷாந்தி மலரே...
உன் வரிசையில் எத்தனைபேர்?
அணிவகுத்து வை.
அங்கேயும் அந்தக் கரங்கள் நீளலாம்.
என்றும்
எங்கள் தலைமையையும்
வழிகாட்டலையும்
நாங்கள் நம்பினோம்.
அன்று நீங்கள்
ஏதோவொரு நம்பிக்கையில்
அப்பாவிகளாய்
அரக்கர் பிடியில்
அடைக்கலம் தேடியதால்
நீங்கள் துடித்தபோதுகூட
எங்களால் அரவணைக்க முடியவில்லை.
ஏனென்றால்
நாங்கள் தூரத்திலிருந்தோம்.
ஆனாலும்
குமுறிக்கொதித்தெழுந்தோம்
உங்களையெல்லாம்
நாங்கள் மறந்து விடவில்லை.

உங்கள் நினைவுகளால்
உரமேறி நாங்கள்
வலிமை பெறுவதால்
உறுதியாய் சொல்கின்றோம்.
கனவல்ல தமிழீழம்
நாளை நம்நாடு.

மாலதியக்கா!
"இந்த றைபிளைக்
கொண்டுபோய்
அண்ணாட்டைக் குடுங்கோ"
என்று சொல்லி
முதல் பூவாய் நீங்கள்
உதிர்ந்து போனபோதும்,
உங்கள் நினைவு நாளில்
உணர்வுகள் சுமந்து
உங்களுக்கு நாங்கள்
தீபங்களேற்றி
மௌனித்த போதும்
உங்கள் பெயருடன்
அணி திரண்டபோதும்,
கனல் தெறிக்க - எம்
துப்பாக்கி சடசடத்த போதும்,
உங்கள் கனவுகள்
எங்கள் மனங்களில்
எங்களுணர்வுகளுடன்
சங்கமித்த போதும்,
மேலும், மேலும்
உறுதியெடுத்துக் கொள்கிறோம்
"கனவல்ல தமிழீழம்
நாளை நம்நாடு"




eelamhouse.com

# சொல்லப் பயன்படுவர் மாவீர

பண்டைத் தமிழரின் மாவீரச் செயல்களைத் தொகுத்து வழங்கும் புறநானூற்றில் பல்வேறு வரலாற்றுச் செய்திகளை நாம் காணலாம். அவற்றில் ஒரு பாடல் தரும் காட்சியைக் காண்போம்.

வீரன் ஒருவன் தன்னை நோக்கி எதிர்த்து வந்த யானையை வேல்கொண்டு எறிந்து வீழ்த்துகின்றான். வீழ்ந்துவிட்ட யானைக்குப் பின் மிகப்பெரிய பகைவர் படை அவனை நோக்கி வருகின்றது. அவன் அப்பெரும் படையைக் கண்டு அஞ்சாமல் பகைப்படையின் தலைவனையும் வீழ்த்துகின்றான். தலைவனை வீழ்த்திய வீரன் தொடர்ந்து வரும் எதிரிப் படைகளைச் சாகும் வரை எதிர்ப்பதற்கு அணியமாகிறான்.

"மேல் வருங் களிற்றொடு வேரறுரந் தினியே

தன்னுந் துரக்குவன் போலு" (புறம் 274)

தன்னுயிர் போகும் என்றுகூட அவன் அஞ்சவில்லை. தன் தாய் மண்ணை எதிரி கைப்பற்றிவிடக்கூடாது என்று அவன் அஞ்சுகிறான்.

அன்று வேலும் யானையும் கருவிகளாக இருந்தன. அவையொத்த பிறவனவும் கருவிகளாகப் பயன்பட்டன. அன்று தமிழன் போராடியபோது அவனுக்கு நாடு இருந்தது. அவனுடைய போராட்டங்கள் பல தன்னினத்திற்குள்ளேயே நிகழ்ந்தன.

மற்றொரு பாடலில், நீண்ட நாட்களாகக் குழந்தைப் பேறில்லாது, அரிதே ஆண் மகவினை ஈன்றெடுத்தாள் பண்டைநாள் தமிழிச்சி ஒருத்தி, பையன் வளர்ந்த பருவத்தில் அப்பெண்மணி முதுமையடைந்தனள். கொக்கின் தூவியைப் போன்ற வெண்ணிறமாய் அவள் தலை நரைத்தது. அத்தகு சூழலில், தான் அருந்தவம் இருந்து ஈன்றெடுத்த ஒரே ஓர் ஆண்மகன் போர்க்களத்தே போர்க்களிற்றைக் கொன்று தானும் இறந்தனன் என்ற செய்தியைக் கேட்டாள். அவள் அழுது புலம்பவில்லை.

"களிறெறிந்து பட்டன னென்னு முவகை

ஈன்ற ஞான்றினும் பெரிதே" (புறம் 277)

பெற்றெடுத்த காலத்தே அடைந்த உவகையைவிட மிகப்பெரிய உவகையை அடைகிறாள் அத்தாய். அக்காலத்தே வான்படை இல்லை. நுட்பம் வாயந்த கருவிப்படைகள் இல்லை. இன்றைய கடற்படைக் கலங்கள் அன்று இல்லை. ஆனால் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருவிகளும் போர்முறைகளும் அக்காலப் போர் மறவனுக்கு மிகப் பெரிய எதிர்ப்பாகவே இருந்திருக்கும்.

போர்க்கருவிகள் நுட்பம் வாய்ந்தனவாகமாறிய காலகட்டத்தில், போர்த்திறன்மிக்க தமிழர்கள் அடக்குமுறை வல்லாண்மை கொண்டவர்களால் ஒடுக்கப்பட்டனர். தமிழன் நாட்டை இழந்தான். அயலவர்களின் மிதிபாட்டில் சிக்கிக் கிடக்கின்றான்.

தமிழன் வாழும் நாடுகளில் ஆள்வோரின் வல்லாண்மையால் படிப்படியாக அனைத்து உரிமைகளையும் இழந்து வருகின்றான்.

தன் தாய் வழி வந்த மூத்த நம் தமிழை அவனால் நிலைப்படுத்த முடியவில்லை. எங்கு பார்த்தாலும் ஆதிக்க வெறியர்களின் கொடுமைகள் தமிழனின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டன, விடப்படுகின்றன. ஈராயிரம் ஆண்டுகளாக அஞ்சி அஞ்சி வாழ்ந்து, தலைமுறை தலைமுறையாக வீரஞ்செறிந்த மரபணு உயிர்ப்பை இழந்து வந்திருக்கின்றான். இதனால் இவனுக்கு விடிவே இல்லை. இவனுள்ளத்தில் இவனே பூட்டிக் கொண்டிருக்கின்ற அடிமை மனப்பான்மையை உடைத்தெறிவதற்கு எந்தத் தமிழனும் இல்லை என்று சிறிது உறைப்பெடுத்த தமிழர் ஏங்கினர், தவித்தனர்.

ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு தமிழனின் உள்ளத்தில் பூட்டிக்கிடந்த அடிமை மனப்பான்மையை உடைத்தெறிகின்ற வகையில் வீரஞ்செறிந்த பண்டைத் தமிழனின் மரபணு இக்கால மானம் மிக்க தமிழீழ மண்ணில் தான் பிறப்பெடுத்திருக்கின்றது.

இன்று காலம் வேறு. அதனால் கருவியும் வேறு. யானையைவிடப் பல்லாயிரம் மடங்கு ஆற்றல்வாய்ந்த போர்க் கருவிகளை தமிழீழத் தாய் பெற்றெடுத்த விடுதலைப் புலிகள் அடித்து நொறுக்குகின்றனர்.

பெறற்கரிய தலைமகன், தனிப்பெருந் தலைவனின் வழிகாட்டுதலில் பல்லாயிரக்கணக்கான



மாவீரர்கள் இன்று தமிழீழ ம
உயிர்த்திருக்கின்றார்கள்.

உலகம் முழுவதிலும்
வாழ்ந்த தமிழன் இன்று நி
பார்க்கின்றான். தமிழனுக்காக
னின் விடுதலைக்காக, தமிழ்
ணின் மீட்புக்காகப் போராடு
ழனை உருவாக்கிய பெருமை
தலைவர் வே.பிரபாகரன் அவர்க
சாரும். இன்று தமிழீழ விடுதலை
உலகத் தமிழர்க்கே மாபெரும்
புணர்வை ஏற்படுத்தியிருப்பதை
மறுக்க முடியாது.

சொல்லப் பயன்படுவர் சான்றோர், கரும்ப
கொல்லப் பயன்படும் கீழ் (திருக்குறள் 1078)

என்கிறார் வள்ளுவர். எல்லாராலும் எ
காட்டாகக் காட்டப்பெற்று வாழ்வுக்கு வழிகாட்
கொள்ளப் பெறுபவர்கள் சான்றோர். பல
அவர்கள் சொல்லப்படுவார்கள்.

எனவே உலகம் முழுவதும் வாழும் தமிழ
நம்பிக்கை ஒளியாக விளங்கும் மாவீரர்களே
லப் பயன்படுவர்.

பண்டை நாளில் சான்றோர் எனும் சொல் ம
என்ற பொருளிலேயே பெரும்பாலும் பயன்படுத்
டது. மக்கள் நலன் கருதி தம் உடல் பொருள்
அனைத்தையும் மெய்யாகவே ஈகம் செய்பவரே
றோராகிய மாவீரர்.

சிங்களப் பேரினவாத அரசு தனது கீழ்மைக் கு
தால் தமிழீழத்தில் இன அழிப்பைச் செய்தது. செ
வருகின்றது. அதை எதிர்த்து தமிழினத்தைத் தற்கா
காவலரண்களே தமிழீழ விடுதலைப் புலி
இக்காவலரண்கள் இறுக்கமான உறுதியான
மானங்கொண்டவை. இனி எந்தவகை
முயற்சிகளாலும் இக்கட்டுமான
தியை சீர்குலைத்துவிடவும் முடியாது

'பிரபாகரன்' எனும் ஒரு த
தமிழனின் மனம் இன்று பேரண்ட
விரிந்து இன்று உலகம் முழுவதிலும்
தன் பேராற்றலை நிலைப்படுத்தி இருக்கின்

இத்தகு மேன்மையுறு தமிழர்களால் கீழ்மைகள் கரும்புபே
கொல்லப்படும் என்பது உறுதி.

அவர் உயிர்த்தெழும் திசை நோக்கி தலைவணக்கம் செய்வே
"மாவீரர் யாரோ என்றால் மரணத்தை வென்றுள்ளோர்கள்"

**உலகத்தமிழர் நிவாரண நிதியம் - மலேசி**

eelamhouse.com

# எம் உயிரினும் மேலான மக்களே! நீங்கள் புரட்சிக்குத் தயாராகுங்கள்!

எம் உயிரினும் மேலான தமிழீழ மக்களே!

எனக்கு முன் பேசிய ஒரு சில பேச்சாளரின் பேச்சால்தான் நான் பேசவேண்டும் என நினைக்கின்றேன். இது எமது இலட்சியப் போராட்டம். இதை யாரும் கைவிடுமாறு என்னைக் கேட்காதீர்கள். எனது முடிவு எனக்குத் தெரியும். ஏற்கனவே நான் உயிர்வாழ்வது அதிசயமாய் இருக்கின்றது. ஏனெனில் நான் முதல்நாள் உண்ணாவிரதம் இருந்ததைவிட அதற்கு அடுத்த அடுத்த நாள் மேலும் உற்சாகமாய் இருந்தேன். இன்று அதைவிட உற்சாகமாய் இருக்கிறேன். காரணம் நீங்கள் தரும் ஆதரவும் நீங்கள் இந்தப் புரட்சிக்குத் தயாராகி விட்டதும்தான் அதற்காகத்தான் அந்த ஒன்றே போதும் நான் சாகலாம்.

650 பேருடன் 651வனாக நான் போகிறேன். என்னைப்பற்றி யாரும் வீணாகக் கவலைப்படாதீர்கள். அலட்டிக்கொள்ளாதீர்கள். ஆனால் நீங்கள் புரட்சிக்குத் தயாராகுங்கள். எனது அவயவங்கள் செயல் இழப்பதை நான் உணர்கிறேன். இனியொரு மனிதனாக என்னால் வாழ முடியாது என்பது எனக்குத் தெரியும். எனவே அதுமட்டுமல்ல இது ஒரு இலட்சியப் போராட்டம். எமது வீரர்கள் ஒவ்வொருவரும் கொள்கைக்காக உயிரைக் கொடுக்கக்கூடியவர்கள். அவர்களும் என்னைத் தொடர்த்து வருவார்கள். அவர்களையும் தடுக்காதீர்கள். நாங்கள் நான்கு, ஐந்து பேர் சாவதால் எதுவித தீங்கும் ஏற்படாது. மக்கள் புரட்சி வெடிக்கவேண்டும். நான் மூன்று தடவைகள் பேசியிருக்கிறேன். மூன்று தடவையும் திரும்பத்திரும்ப ஒரே கருத்தைத்தான் கூறுகின்றேன். எனவே தயவுசெய்து இலட்சியத்தைக் கைவிடுமாறு கேட்கவேண்டாம். நீங்கள் அவ்வாறு கேட்பது இலட்சியத்தை அவமதிப்பது போல் இருக்கும். நாங்கள் சாதாரணமாக ஆளவேண்டுமென்ற ஆசையாலோ, வாழ வேண்டுமென்ற ஆசையாலோ இயக்கத்துக்கு வரவில்லை. எம் தலைவரும் எம்மை அவ்வாறு வளர்க்கவில்லை. எமது இயக்கம் அவ்வாறில்லை. தயவுசெய்து மீண்டும் கேட்கின்றேன் மன்றாட்டமாகக் கேட்கின்றேன் என்மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாக அவ்வாறு கேட்காதீர்கள். இலட்சியத்தை அவமதிக்காதீர்கள். தயவு செய்து எனக்கு உண்மையில் (சிரிப்புடன்) பெரும் ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது. ஏறக்குறைய 72 மணித்தியாலங்கள் கடந்துவிட்டது. உண்மையில் நான் (சிரிப்புடன்) நேற்றையைவிட அதிக உற்சாகமாக இருக்கிறேன். எனது உடல் நிலையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒருவேளை அனைவரதும் பிரார்த்தனையோ எனக்குத் தெரியாது.

ஆனால் மீண்டும் மீண்டும் கேட்பது ஒன்றைத்தான் எமது போராட்டம் தொடரப் போகிறது. மக்கள் புரட்சி வெடிக்கப்போகிறது. அந்தப் போராட்டத்திற்கு நீங்கள் தயாராகுங்கள். எனது பேச்சிலேயே நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் நான் இன்று எவ்வளவு தூரம் உற்சாகமாய் உள்ளேன் என்று நேற்று என்னால் பேச முடியவில்லை. ஆனால் இன்று (சிரிப்புடன்) தாராளமாகப் பேச முடிகிறது ஏனோ தெரியவில்லை. எனவே நான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கேட்பது நீங்கள் எங்கள் போராட்டத்திற்குத் தயாராகுங்கள். அதைத்தான் நான் மீண்டும் மீண்டும் கேட்கிறேன். நீங்கள் போராடுங்கள் நான் மேலேயிருந்து நீங்கள் தமிழீழம் அமைப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பேன். நாம் என்றும் உங்களை விட்டுப்போக மாட்டோம். எங்கள் உடல் மட்டும்தான் போகும். உயிர் என்றும் உங்களோடு ஒட்டியிருக்கும் அதை மறந்துவிடாதீர்கள். எம்மைத் தொடர்ந்து எமது தோழர்கள் வருவார்கள் சகோதரிகள் வருவார்கள். அவர்களையும் நீங்கள் தடுக்காதீர்கள் அவர்களுக்கும் வழிவிடுங்கள். நான் ஏற்கனவே பல தோழர்களிடம் கூறிவிட்டேன். நான் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். ஏனைய தோழர்களும் அங்கு உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். அவர்களையும் மறுக்காதீர். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு அவர் இலட்சியம்தான் முக்கியம். உயிர் முக்கியமல்ல. அவர்களது வாழ்வு முக்கியமல்ல. சாப்பாடோ தண்ணியோ முக்கியமல்ல. அவர்களது இலட்சியம்தான் முக்கியம். அதை நிலைநாட்டத்தான் நான் தலைவரால் முதல் முதலாக நியமிக்கப்பட்டேன். தலைவருடன் சண்டையிட்டுத்தான் இவ் அனுமதியைப் பெற்றேன். எனவே எனக்கு எனது முடிவு தெரியும். எனவே தயவு செய்து நீங்கள் அலட்டிக் கொள்ளாதீர்கள். தயவு செய்து என்மீது கொண்ட பாசத்தாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ தயவு செய்து பேச்சாளர் எவரும் இந்தக் கருத்துடன் மேடையில் பேச வேண்டாம். இது என்னை அவமதிப்பதுபோல் உள்ளது. என்னைத் தண்ணீர் குடிக்குமாறு கேட்பது என்னை அவமதிப்பது போல் உள்ளது. நான் அதற்காக இங்குவந்து இருக்கவில்லை. அதைத்தான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கேட்கிறேன். உண்மையைச் சொல்கிறேன். எனது மூளை ஒன்றையுமே கிரகிக்கவில்லை. (சிரிப்புடன்) ஒரு வேளை மூளை மாறாட்டமாய் போய்விடதோ எனக்குத் தெரியவில்லை. தயவு செய்து மன்னியுங்கள். நான் ஒரே விடயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்வது எனக்குத் தெரிகிறது. தயவு செய்து மன்னியுங்கள். நான் பேசுவதாக இருக்கவில்லை. எனக்கு முன் பேசிய பேச்சாளரால்தான் பேசவேண்டி வந்தது. தயவுசெய்து இதைத் தவிர்த்து நீங்கள் மக்களை எழுச்சியூட்டும் வகையிலாகப் பேசுங்கள். நான் எந்த இலட்சியத்துக்காகச் சாகிறேனோ அந்த இலட்சியத்தை அடையக்கூடிய வகையில் மக்களை எழுச்சியூட்டும் வகையில் தயவுசெய்து பேசுங்கள். அதைத்தான் விரும்புகிறேன். அதைத்தான் மீண்டும் உங்களிடம் நான் கேட்கிறேன். இறுதியாக என் உயிரினும் இனிய மக்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.

வணக்கம்




eelamhouse.com

கண்ணீரில் நீந்துமெங்கள் தேசம் கழுவி
செந்நீராய் ஓடுமினி பகைவர் குருதி.

அந்நாளில் கொடிநாட்டி அடித்த கொட்டம்
இந்நாளில் வந்ததவர் தலைக்கே நட்டம்.

மலைமுகட்டு நீர்வெள்ளம் பள்ளம் நோக்கி
சீறிப்பாய்ந்தது போல் பாய்ந்தது புலிகள் சேனை.

ஐந்தாண்டு முன்னாலே படைநடத்தி
இழிபகைவர் யாழ் மண்ணில் காலை வைத்தார்.

அன்னவர்கள் அந்தன்று இரண்டுவழி சொன்னார்
தமிழ்மாந்தர்க் கினியுய்வு இல்லை யென்றே.

சயனைட்டை உள்ளெடுத்தால் மரணம், இல்லை
கடலில்தான் பாயவேண்டும் புலிகள் என்றார்.

செந்தணலாய் செருக்களத்தில் வந்தே பாய்ந்தார்,
செல்கிறது பகை வெள்ளம் கடலில் பாய.


இப்போரில் எம்வீரர் மண்ணில் வீழ்ந்தால்
மாவீரர் என்றெங்கள் மண்ணிற் புதைப்போம்.

மாவீரர் கனவையெங்கள் நெஞ்சில் வைப்போம்
அவர் பாதை தனிலெங்கள் காலை வைப்போம்.

புத்தாயிரக் கார்த்திகைத் திங்கள் ஒன்றில்
புகுந்திடுவார் புலிவீரர் எங்கள் மண்ணில்.


மேகத்தில் மலர்ச்செடிகள் இல்லை, ஆனால்
மழைபொழிந்து அவர் வீரம் வாழ்த்தும் மேகம்.

தாகமது தமிழீழம் ஒன்றே என்னும்
தாரகத்து மந்திரமே மூச்சாய் ஆகும்.




# புத்தாயிரக் கார்த்திகை


eelamhouse.com



வல்லமைத் தலைவனின் வரிப்புலிகள்
சந்தன மேனியைத் தணலாக்கி
உடலோடு வெடி சுமந்தார்
உயிர் கொண்டு எழுகின்ற
காவியத்தின் வேங்கைப்புலிகள்
கடல்மீது வந்தேறும் பகையை
சக்கை வண்டி கொண்டழித்து– எம்
நெஞ்சங்களில் நிறைந்தார்.
உலகம் வியக்கும் கரும்புலிகளே
உங்களை நாம் இழந்ததால்
மௌனமாய் உள்ளம் அழுகிறது.
வீரர்களே உங்களது பாதம் பட்ட
பூமியை நாள்தோறும் தொழுகின்றோம்
உங்களது பாதையிலே– நாம்
அணியாய் விரைந்து செல்கின்றோம்.

**க.சங்கீதன்**



eelamhouse.com

# மாவீரர்களைப் போற்றுகின்றோம்!

## மாவீரர் கல்லறையில் வரலாறு பிறக்கின்றது

மாவீரர் நினைவில் தமிழீழம் நனைகிறது
மாவீரர் நினைவில் சிங்களம் சிதைகிறது
களம் அமைத்து தளம் விரித்து
பௌத்த சிங்களம் இரை தேட– தமிழை
ஆழமாகப் புதைத்து விகாரையிட வந்தவரே
வகை வகையாய் படை நடத்தி
அடிமை கொள்ள முயன்றவரே
நடை மிடுக்கோடு நிலம் விழுங்கி
எஞ்சியதை நெருப்பிலிட நினைத்தவரே
உயர்ந்த படை வீரம் ஒரு நொடியில்
உலர்ந்து போய் மறைந்ததென்ன.

மாவீரர் வாரம் என்றால்– புலிகளுக்குள்
புதிய உயிர் மூச்சு விடும்
எம் தலைவன் விழிசிவந்து கனல் வீசும்
திசை பார்த்து விழித்திருந்தார்
அணி அணியாய் புலியணிகள்
எம்தலைவன் மதிபுரியா சிங்களமே
சுட்டுவிரல் விசை வீச்சில்
புதியகளம் விரிந்தது பார்.
பண்டார நாயக்கா வாரிசிற்கு
பண்டார வன்னியன் பூமியில் ஒரு பதில்
எல்லை தாண்டி வந்து பேரம் பேசி
ஆண்டியாய் அடங்கி வா என்றவர்
பூநகரி புகுந்த போதும் மண்டியிட்டார்
மாங்குளம் புகுந்த போதும் மண்டியிட்டார்
ஊர்ந்து வந்து குந்தியவர்– புலிவீச்சில்
குதிக்கால் பின் தலைமுட்ட
அதி விரைவாய் ஓடியது–உலக
கின்னஸில் இடம் பிடிக்கும்.

மாவீரர் நினைவில் தமிழீழம் நனைகிறது
மாவீரர் கல்லறையில் வரலாறு பிறக்கிறது.

**வயவை.அ.யூலியஸ்**



## பாதச்சுவடுகளில்.. விடுதலைப் பயணம்..!

எம் தமிழினத்தின்
கண்கள் ஒளியிழந்து
பார்வையிழந்து தத்தளித்த வேளையில்
புது ஒளி கொடுத்து
புது வழி அமைத்த– எம்
தலைவன் வழி தொடர்ந்து
கொடும் சிங்களத்தினால்
புண்பட்டுப் போன தமிழினத்தை
புதிதாய் பண்படுத்த எழுந்தவர்களே!
எங்கள் மாவீரர்களே!..
உங்கள் நெஞ்சுரத்தில்– நெடும்
பயணம் தொடர்ந்தீர்கள்– தமிழீழ
இலட்சியத்திற்காய் உயிர் துறந்தீர்கள்!
உங்கள் வீரியத்தில்
பகை எரிந்து நீறான வேளையில்
உங்கள் திருமுகம்
எம் இதயத்தில் மலர்ந்தது!
எம் உறவுகளே!..மாவீரர்களே!
உங்கள் நினைவுகளில்
உங்கள் பாதச்சுவடுகளில்–எம்
மக்களின்
விடுதலைப் பயணம் தொடர்கிறது!

**புதுவை.சி.உமாகாந்தன்**

## நெஞ்சமதில் உங்கள் வீரம் வாழும்

கார்கால மேகம் நீரூற்றும் நேரம்– வீரக்
கல்லறை ஓரம் கண்களில் ஈரம்
போர்கால மேகம் புடை சூழும் நேரம்– புலிப்
போர் முறை நாடிய உங்களின் வீரம்


கண்ணிரண்டும் மாரிமழை பொழிய– எங்கள்
நெஞ்சமது விம்மிவிம்மி நோக
கையிரண்டும் வண்ண மலர் தூவ– எங்கள்
நெஞ்சமதில் உங்கள் வீரம் வாழும்

வெந்து வெந்து எங்களுள்ளம் வாட– அதில்
வந்து வந்து உங்கள் முகம் தோன்ற
நொந்து நொந்து வானமது கரைய– உங்கள்
கல்லறையில் தீபமது எரியும்

தாயகத்து வித்தெனவே வீழும்– வீரத்
தூயவரைத் துயிலுமில்லம் தாங்கும்
எண்ணி எண்ணி எங்களுள்ளம் ஏங்கும்– நீங்கள்
எழுந்து வர இறைவனிடம் கேட்கும்.

உங்கள் கனவிங்கு நிறைவேறும்– இனி
உங்கள் கல்லறைகள் இங்கு கதை பேசும்
கொல்ல வந்த பகை ஓடும்– இனி
வீரத் தங்கத் தமிழீழமது மலரும்.

**தமிழ்மது**





eelamhouse.com

# ஈகத்திருநாள்


வெற்றிகள் பல கிடைக்க தம்முயிர் தந்த
தியாகிகள் எமை வாவென்றழைத்தனர்
ஏன் இன்னும் தயக்கம்....
புறப்படு தமிழா ஊருக்கு
தம்மையே அர்ப்பணித்து
அடிமைப்பட்ட தாய்நாட்டை
மீட்கக் குதித்தனர் போர்க்களத்திலே
வீரம் கொண்டு.
நம்வீரர் பெயர் சொல்லும்
எம்மண்ணில் இன்று
மாவீரர் ஈகத்தால் கிழக்கு வெளிக்கிறது.
தாயகம் காத்திட தம்மையே தந்தவரின்
துயிலுமில்லங்கள் சுடரேற்றப்படும்
வேளையிது, ஈகவரலாற்றில்
முதல் வித்து வரலாறாகிய நாளில்
ஈகச் சுடரேற்றுவோம்.
தூய ஒளியில் அமிழ்ந்து
தாயகக் கனவை சுமந்தவர் நாளில்
தாயக மீட்பிற்கு உறுதியெடுப்போம்.



கலை பண்பாட்டுக் கழகம்
நெதர்லாந்து


eelamhouse.com

பதித்தடம்



# அசாத்திய ஆற்றலில் அடைந்த வெற்றிகள்

ஆனையிறவுக் கூட்டுப் படைத்தளம் அந்த ஜனவரி மாதத்து நிசப்தமான குளிரில் உறைந்து போய்க்கிடந்தது. உடலைக் குத்தி ஊடுருவும் உப்புக் காற்றின் குளிரையும் மீறி சில உருவங்கள் அங்கே எதிரியின் முன்னணித் தடைகளை நோக்கி வரிசையாக நகர்ந்து கொண்டிருந்தன.

அது ஒரு வலிந்து தாக்குதலுக்குரிய நகர்வு. இறுமாப்புடன் நிமிர்ந்து நிற்கும் ஆனையிறவுத் தளத்தின் இதயத்தில் பாய்வதற்காய் அவர்கள் முன்னேறிக் கொண்டிருந்தனர். அந்த உவர் மண்வெளியில் ஆங்காங்கே காணப்படும் கன்னாப்பற்றைகளை மறைப்பாகக் கொண்டு அவர்களுடைய அணி நகர்ந்து கொண்டிருந்தது. எதிரியின் முகாமைப் பலமுனைகளில் நெருங்கிக் கொண்டிருந்த அணிகளில் பிரதான முகாமைத் தாக்கியழிக்கும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப் பிரிவின் அந்தக் குறிப்பிட்ட அணியை வழிகாட்டி நகர்த்திக் கொண்டிருந்தான் ஒரு வேவுப்போராளி.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. அவர்கள் எதிரியின் முன்னணித் தடைவேலியை நெருங்கியிருந்தனர். நீண்டதொரு இரகசிய நகர்வை வெற்றிகரமாகச் செய்து முடித்துவிட்ட திருப்தியில் அவர்கள் இருந்தனர். ஆனால், இன்னும் கூட அபாயம் நீங்கவில்லை. இப்போதும் எதிரியால் அவதானிக்கப்பட்டால் அவர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்படலாம். காவலரண்களின் முன்னால் சில பத்து மீற்றரில் அவர்கள் நிலத்துடன் நிலமாகக் கிடக்க, அவர்களை வழிகாட்டி அழைத்துவந்த போராளி கைகளில் முட்கம்பி வேலித்தடையை அகற்றும் கருவியுடன் முன்னேறினான்.



eelamhouse.com

சண்டை தொடங்குவதற்கு இன்னும் சில நிமிடங்களே இருந்தன. முதலாவது இருந்த கம்பி வேலியை வெட்டி அகற்றிவிட்டு இரண்டாவது தடைக்கு அவன் 'டோப்பிட்டோ' குண்டைப் பொருத்த, மறுமுனைகளில் சண்டை தொடங்குகின்றது. எல்லோரும் ஆவலுடன் அங்கே பொருத்திய 'டோப்பிட்டோ' வெடிக்குமெனக் காத்திருக்க, அந்தக் குண்டு வெடிக்காமலேயே போய்விடுகின்றது.

துப்பாக்கி சடசடக்க, எதிரி வானில் ஏவிய 'பரா' வெளிச்சக் குண்டுகள் இரவைப் பகலாக்கி வானில் ஒளி வீச, அங்கே அணியினர் தமக்குரிய பாதைத் தடையை தகர்க்கமுடியாமல் இருப்பதை எதிரி கண்டுகொண்டான். தனது சூட்டுவலுவை இப்போது அந்த அணியின் மீது எதிரி மையங்கொள்ள வைத்தான்.

நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. உள்ளே நுழைய வேண்டிய அந்த அணி வழியிலேயே எதிரியின் சூட்டிற்கு ஒவ்வொருவராய் இழந்து கொண்டிருந்தது. மீண்டும் அந்தத் தடையைத் தகர்க்க அவ்விடத்தில் கைவசம் மேலதிக டோப்பிட்டோவோ, பின்னாலிருந்து வரவழைக்க அவகாசமோ இல்லாத இக்கட்டான நிலையில் எல்லோரும் தவிப்புடன் பார்த்திருக்க, அங்கே கைவசம் இருந்த ஒரேயொரு கம்பிவெட்டும் 'கட்டரு'டன் எழுந்தான், அந்த அணிக்கு வழிகாட்டி முன்னே நகர்ந்து கொண்டிருந்த லெப்டினன்ட் மலரவன்.

துப்பாக்கிச் சன்னங்களால் துளைத்து உடலிலிருந்து குருதிவழிய, தள்ளாடியபடி எதிரியின் தடைக்கம்பி வேலியை நெருங்கியவன், ஒவ்வொரு கம்பியாய் வெட்டத் தொடங்கினான். எதிரியின் துப்பாக்கிகள் அவன் ஒருவனையே குறிவைக்க, உடல் முழுவதும் சன்னங்களால் சல்லடையாக, அந்த சொற்ப நேரத்தினுள் தடையை வெட்டி அகற்றிவிடவேண்டும் என்ற உறுதியுடன் தடைக்கம்பிகளை வெட்டி வீழ்த்தியவாறு அந்தக் கம்பிகளின் மீதே சரிகின்றான் மலரவன். இறுதிக் கம்பி மட்டும் இன்னும் வெட்டப்படாமல் இருந்தது. ஆயினும் பாதை ஏற்பட்டுவிட்டது.

அவன் ஏற்படுத்திக்கொடுத்த பாதையின் ஊடாக அணிகள் உள்ளே பாய்கின்றன. அவனது தோழர்கள் அவனைக் கடந்து எதிரியின் அரண்களை நோக்கி ஓடும்போது எஞ்சிய உயிர்த்துளியில் அவனது நாவு உச்சரித்தவை இவைதான்.

"மச்சான்! ஒன்றையும் விடாமல் பிடியுங்கோடா"

அன்றைய அந்த அணியின் சண்டையின் முடிவை மாற்றியமைத்தவன் அந்தப் போராளி. எதிரியின் சூட்டிற்கு ஒவ்வொருத்தராய் வீழ்ந்து கொண்டிருந்த நிலையை மாற்றியது அவனது முடிவுதான்.

தன் உயிர் கொண்டு அவன் தடையகற்றத் துணிந்தமையால் தொடர்ந்து எதிரிகளை வீழ்த்திக் கொண்டு முன்னேறியது அவனது அணி. அன்றைய சண்டையில் அவர்கள் ஏராளம் இராணுவத்தைக் கொன்றிருந்தனர். பலம்வாய்ந்த எதிரியின் பிரதான முகாமை ஊடுருவி அவனது ஆயுதங்கள் உள்ளிட்ட ஆட்லறித் தளத்தை அவர்கள் அழித்திருந்தனர். அத்தனையையும் அன்று சாத்தியமாக்கியது, தடையகற்றி தன் சாவை சரித்திரமாக்கிவிட்ட அந்தப் போராளியின் இறுதிநேர முடிவு.

எமது விடுதலை வரலாறு பற்றித் தலைவர் அவர்கள் கூறுவது போல் 'ஆயிரம் ஆயிரம் தனி மனித சரித்திரங்கள் சங்கமமாகிய பெரு நதியாக வீறு கொண்டோடும் எம் விடுதலை வரலாற்றில்' தானும் ஒருவனாய் சங்கமித்துப் போன இவனதும் இவன் போன்ற சரித்திர நாயகர்களினதும் தியாகங்களே இன்று எம் விடுதலை நதியை வெற்றிப் பாதையில் பிரவகிக்கச் செய்கின்றன.

✦ ✦ ✦

மட்டக்களப்பின் குறிப்பிட்ட படை முகாமான புளுக்குணாவித் தளம் அமைதியாய்க் கிடந்தது. வெள்ளிகள் அற்ற வானம் காரிருளில் மூழ்கிக்கிடந்தது. மழை வரும்போல இருந்தது. அடிவானில் இடி மின்னல்க்கீற்றுக்கள் தோன்றி மறைந்தன.

நேரம் நள்ளிரவைக் கடந்திருந்தது. அணிகள் எதிரியின் தடைகளை அகற்றியவாறு முகாமினுள் ஊடுருவிக் கொண்டிருந்தன. அங்கே ஒரு பாதையில் கைகளில் டோப்பிட்டோவுடன் தடைகளை வெட்டி தனது அணியினருக்கு ஒரு பாதையை ஏற்படுத்தியவாறு உள்ளே நகர்ந்து கொண்டிருந்தான் அந்தப் போராளி, 2ஆம் லெப்டினன்ட் குருதீஸ்வரன்.

எதிரி அடித்த "தேடொளி விளக்குகள்" அடிக்கடி தலைக்கு மேலால் ஏணிபாய்ச்சிச் சென்றன. அவர்கள் சண்டை தொடங்குவதற்காய் காத்திருந்தனர். எதிரியின் முதலாவது தடைகளை வெட்டி இரண்டாவது தடைக்கு 'டோப்பிட்டோ'க் குண்டைப் பொருத்தி விட்டு, குருதீஸ்வரன் மீண்டும் தன் அணியை நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தான்.

மெல்ல மெல்ல வீழ்ந்த மழைத்துளிகள் பெருமழையாகப் பொழியத் தொடங்கின. மார்கழி மாதத்து குளிர் காற்று நடுங்க வைத்தது. சண்டை தொடங்க இன்னும் சில நிமிடங்களே இருந்தன. கைகளில் இறுகப் பற்றிய துப்பாக்கியுடன் அந்த இறுதிக் கணத்திற்காய் போராளிகள் காத்திருந்தனர். அப்போதுதான் அது நிகழ்ந்தது. மழையின் இரைச்சலை ஊடுருவி "டமார்" என ஒரு வெடியோசை. மின்னல் ஒளியில் குருதீஸ்வரன் கால்கள் துண்டிக்கப்பட்டுக் கிடந்தான், ஆனால் உயிருடன்.

அந்தச் சத்தம் எதிரியை உசார்ப்படுத்தியது. எதிரி அவர்களை நோக்கி தேடொளி விளக்கினைத் திருப்பினான். குருதீஸ்வரன் காயத்தின் வேதனையில் முனகினால்கூட அது சில மீற்றர் தூரத்திலிருக்கும் எதிரிக்கு கேட்டுவிடும். எல்லோரும் தவிப்புடன் பார்த்திருக்க, அந்த மழை இரைச்சலினூடு குருதீஸ்வரன் முணுமுணுத்தது மெல்லக் கேட்டது.

"நான் சத்தம் போடமாட்டன் நீங்கள் தொடர்ந்து முன்னேறுங்கோ."

கண் முன்னாலேயே அவனது குருதி மழை நீரில் கரைகிறது. "மழையில் ஏதோ காட்டு விலங்கு மிதிவெடியில் மாட்டிவிட்டது" என நினைத்தானோ என்னவோ? எதிரி சற்று நேரத்தில் அமைதியாகி விட்டான். தொடர்ந்து குருதிச் சேற்றில் கிடந்த தோழனைக் கடந்துஅவர்கள் முன்னேறினர்.

"இரும்பை யொத்த இலட்சிய உறுதியுடனும் எதையும் தாங்கும் இதயத்துடனும் சாவுக்கும் அஞ்சாத துணிவுடனும் எம் வீரர்கள் போராடினார்கள்" எனத் தலைவர் அவர்கள் எம் வீரர்களை எண்ணிப் பெருமையுறும் செயலை அவன் செய்திருந்தான்.

ஒரு போர்வீரன் தன் உயரிய வீரத்தை வெளிப்படுத்துவது என்பது வேறு. ஆனால் அவனும் ஒரு சாதாரண மனித உயிர் என்ற வகையில், தனது கால்கள் சிதைந்த பொழுதிலும் இயல்பான மனதின் தூண்டல்களை வெளிப்படுத்தாதது, ஒலியெழுப்பாது வேதனைகளை அடக்கிக் கொள்வதென்பது வேறு. இது எப்படி ஒரு மனிதனுக்கு சாத்தியமாயிற்று? அதற்குத்தான் எத்தனை நெஞ்சுறுதி தேவைப்பட்டிருக்கும்.

ஆட்லறிகளைக் கைப்பற்றிக் கொண்ட அன்றைய எமது நடவடிக்கையின் மகத்தான வெற்றிக்கு அவனது நெஞ்சுறுதியே ஆதாரமாக அமைந்தது.

**-அன்பு-**





eelamhouse.com

# கல்லறைக் காணிக்கை

எட்டியுதைக்கும் கால் எடுத்து
கழுவியொரு
முத்தமிட்டுக் கிடந்ததெம் முற்றம்.
ஆளவருவோரின்
தோள்தழுவித் துவண்டிருந்ததெம் முற்றம்.
வேர்கள் தொழப்பார்த்து விழுதுகளும் கையெடுத்துக்
காலைக்கழுவிக் கண்துயின்ற முற்றமிது.
பாலை– நெடும்பாலைப் பற்றையெனக்
கிடந்த முற்றம்.
வந்தாரெம் சிறுவரிசை.
வருகையின் பின்
மந்தாரம் போட்டு மழைபொழியும் முற்றமெனச் செய்தார்.
ஜெகத்தையிவர் திகைக்கவைத்து விட்டார்காண்.
பொய்யாய்க் கிடந்த புலவைப்
புது நிலமாய் உழுதார்
விதையெறிந்தார்
ஊர்முழுதும் விளைச்சலென
எழுதும்படியாக எப்படியோ செய்துவிட்டார்.
ஊரழிப்பேன்
உன்னூரில் உலையேற்ற விடமாட்டேன்
சீரழிப்பேன்
உன்னைத் திசைக் கொன்றாய்ச் சிதற வைப்பேன்
தேரெரிப்பேன்
நீ வணங்கும் சிவபுரத்தைத் தீயிடுவேன்
பேரழிப்பேன்
தமிழர்நில புலமெல்லாம் நானழிப்பேன்
என்றேயெழுந்தானெம் எதிரி.
அவனையெதிர்
கொண்டாரெம் வீரக்குழந்தைகள்.
நெருப்பாகி
நின்றெதிர்த்து இந்தோ நிலமுறங்கும் மாவீரர்
கல்லறைக்கு என் கண்ணீர் காணிக்கை.
இக் கவிதைச்
சொல்லடுக்கையெல்லாம் சோடித்தேன் கல்லறையில்.



# மண்குளிரச் செய்த முகில்கள்

*மாரிமழையாகி நீர்தெளித்து ஆடி*
*மண்குளிரச் செய்த முகில்கள்,*
*மாதவங்கள் செய்த போதெமது பூமி*
*மடியிலுரு வான உயிர்கள்.*
*போரில் விளையாடும் வேளையுடல் வீழ்ந்த*
*போதுமுயி ரான சிலைகள்.*
*பூங்குயில்கள் பாடும் ஈழமதை வாங்கப்*
*போயெரிந்து போன புலிகள்.*

*மாலை மணி ஆறு ஆகும் பொழுதாக*
*மாரி மழை கொஞ்சம் ஓயும்.*
*மாலைமலர் சாத்தித் தீபஒளி காட்டும்*
*வேளைவிழி ஆறு பாயும்.*
*சாலை, கடையோடு வீடுஎன யாவும்*
*சாமிதுயி லில்லம் கூடும்.*
*சாதிமத மென்று வேறுபட லின்றித்*
*தேவநிலை கொண்டு பாடும்.*

*வாரியெடுத் தும்மை வாசல்தனில் வைத்து*
*வாசமலர் தூவும் பொழுதில்*
*வந்தெமது கண்ணில் நின்றுதெரி கின்ற*
*வாறுவர வேண்டும் அருகில்*
*தேரிலெழுந் தெங்கள் தீபஒளி காணத்*
*தேடிவர வேண்டும் உறவு*
*தேசமெலா மின்று வீசும் குளிர் காற்றில்*
*சேர்ந்து எழவேண்டும் சிறகு.*

-புதுவை இரத்தினதுரை-





eelamhouse.com

# மண்ணும் மணக்கிறது!

-பழ. நெடுமாறன்

சந்தனம் மணக்கும்; அது தோன்றிய மலை மணக்காது. முல்லையின் மணம் மயங்க வைக்கும். ஆனால் அது தோன்றிய மண் மணப்பதில்லை.

தாமரை மலர்ந்து மணம் வீசும். ஆனால் தடாகம் மணக்காது. இயற்கையின் விதி இது. இதை மாற்ற யாராலும் இயலாது.

ஆனால் விதியின் எழுத்து கிழிக்கப்பட்டுவிட்டது. மண் மணக்கிறது. ஆம்! தமிழீழத் திருமண் புகழ் மணம் கமழக் கமழ மணக்கிறது.

தாயகத்தை மீட்கப் போராடி, களத்தில் வீழ்ந்துவிட்ட மாவீரர்களின் புகழுடம்புகள் விதைக்கப்பட்ட மண் மணக்கிறது.

தமிழர்களின் வீரப்புகழ் மணம் காற்றிலே கலந்து கடல் கடந்து பரவி நம்மைச் சிலிர்க்க வைக்கிறது.

பொதிகையில் பிறந்து தமிழகத்தில் தவழ்ந்து வரும் தென்றல் தரும் சுகம் ஈடு இணையற்றது. ஆயினும் தமிழ்ப்புலிகளின் குருதியால் சிவந்த தமிழீழ மண்ணில் இருந்து வீசும் காற்றில் கலந்துவரும் மணத்திற்கு தென்றலும் நிகராகாது.

"நெற்றிக்கண்ணைத் திறந்து காட்டினாலும் நின் தேவியின் கூந்தலுக்குக்கூட இயற்கை மணம் கிடையாது" என இறைவனை நோக்கிக் கூறியவன் நக்கீரன். அந்த நக்கீரன் இன்று இருந்திருந்தால் தமிழீழத் திருமண் மணக்கிறது எனக் கூறியிருப்பான்.

தாய்த்திரு மண்ணைத் தமது தியாகத்தினால் மணக்க வைத்தவர்கள் **மாவீரர்கள்.**

வாழ்வின் வசந்த காலத்தில், வாழவேண்டிய வயதில், விரும்பி வாழ்வை முடித்துக் கொண்டவர்கள் **மாவீரர்கள்.**

இளம் வயதில் மரணத்தை மகிழ்ச்சியோடு வரவேற்றுத் தழுவிக் கொண்டவர்கள் **மாவீரர்கள்.**

மலராத மொட்டுக்களாகவே உதிர்ந்தவர்கள் **மாவீரர்கள்.**

தாயக விடுதலைக்காகப் போராடி தாய் மண்ணிலேயே புதைந்து அந்த மண்ணை மணக்க வைத்தவர்கள் **மாவீரர்கள்.**







eelamhouse.com


இத்தாலி


கனடா


ஜேர்மனி


டென்மார்க்


பிரான்ஸ்


சுவிற்சர்லாந்து


அவுஸ்திரேலியா







eelamhouse.com



நெதர்லாந்து




அமெரிக்கா



இங்கிலாந்து





லெபனான்



மலேசியா



நோர்வே



சுவீடன்



மத்திய கிழக்கு



ருஸ்சியா

# உலகெங்கும் தமிழீழ மாவீரர்நாள் நிகழ்வுகள் 1999


eelamhouse.com






eelamhouse.com

# வீரத்தின் விருட்சமாய் விழுதாகிப் போனவள்



விடுதலைப் புலிகள் வித்தியாசமானவர்கள். இவர்களின் கைகளில் ஆயுதங்கள், அழிப்புக் கருவிகள் அல்ல ஆக்கத்தின் ஊற்றுக் கண்கள் இவை. தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வுகின்ற வேளைகளில், அதர்ம சங்காரத்திற்காக ருத்திர அவதாரம் எடுக்கின்ற இவர்கள் மென்மையான உள்ளங்களைக் கொண்டவர்கள். காலத்தின் தேவை கருதி, காலம் இட்ட கட்டளையை நிறைவேற்ற ஆதிக்க வெறியர்களுக்கு எதிராக போராடுகின்றார்கள். இவர்கள் தேசத்தின் விடியலுக்காகத் தங்களது இன்பங்களைத் தொலைத்தவர்கள். வசந்தங்களைத் தொலைத்தவர்கள். புதிய சகாப்தத்தின் சிற்பிகள் இவர்கள்.

அந்த வகையில் தான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதற் களப் பலியான 2ஆம் லெப் மாலதியின் வீரச்சாவும் புதிய சகாப்தம் ஒன்றைப் படைத்தது. "இலட்சியத்தால் ஒன்று பட்ட மக்களை எந்தவொரு சக்தியாலும், ஆக்கவோ அழிக்கவோ முடியாது" என்ற சூரியத் தலைவனின் உணர்வுச் சிதறலை அந்நியப் படைக்கு உணர்த்தி அனுப்பியது. வீர சுதந்திரம் வேண்டி நிற்போருக்கு விலங்கிட முடியாது என்பதை வில்லங்கம் புரிய வந்த அந்நியருக்கு உணர்த்தியது.

மீளவும் தமிழர் தாயகத்தில் குருவிச்சை நாச்சியாரதும், ஆனையை அடக்கிய அரியாத்தையினதும் சந்ததி அதர்மத்திற்கெதிராக, நான்கு நூற்றாண்டுகளாகத் தமது மண் தொலைத்து விட்ட சுதந்திரத்திற்காகக் களத்திடை குதித்தை, கோப்பாய் கைதடி வெளியில் 10.10.1987 அன்று அந்நியப் படைகளுடனான மோதலில் இடம்பெற்ற மாலதியின் வீரச்சாவு உலகிற்கு முரசறிவித்தது.



1967 ஆம் ஆண்டு தை மாதம் 4ஆம் திகதி சகாய சீலி என்ற பெயருடன் விவசாயக் குடும்பத்தில் பிறந்தாள் மாலதி. சிறு வயதிலேயே துடிதுடிப்பும், நினைத்தைச் செய்து முடிக்கும் தன்மையும், எதையும் ஆராய்ந்து பார்க்கும் திறனும் கொண்ட மாலதி ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் தனது கல்வியைப் பெற்றாள்.

பாடசாலையில் கல்வியில் சிறந்த மாணவியாகவும் அதே வேளை விளையாட்டிலும் சிறந்த வீராங்கனையாகவும் திகழ்ந்தாள். கபொத சாதாரண தரம் வரை பயின்ற மாலதி தாயகத்தின் அவல நிலை கண்டு ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் உதவியாளராகச் செயற் பட்டு பின்னர் முழு நேரப் போராளியாகப் பயிற்சிக்காக தமிழகத்திற்கு அனுப்பட்டாள்.

பயிற்சிதனை செவ்வனே முடித்த மாலதி 1986 ஆம் ஆண்டில் தமிழீழ மண்ணில் ஆயுதப் போராளியாக மன்னாரில் காலடி எடுத்து வைத்தாள். 1987 இல் யாழ் குடாநாட்டைக் கைப்பற்ற சிறீலங்கா இராணுவம் முயற்சித்துக் கொண்டிருந்த வேளையில் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் போராளிகள் யாழ் குடாநாட்டுக்கு அழைக்கப்பட்டனர். இந்நிலையில் மன்னாரில் நின்று செயற்பட்ட மாலதியின் மகளிர் அணியும் இங்கே வந்தடைந்தது. நாவற்குழி இராணுவ முகாமைச் சுற்றியிருந்த காவலரண்களில் காவல் காக்கும் கடமையை மாலதி ஏற்றுக் கொண்டாள்.

கோட்டைப் பகுதியில் உள்ள எமது நிலைகளில் மாலதி கடமை புரிந்த காலங்களில் எல்லாம் அவளுக்குள் ஆழ்ந்திருந்த வீரமும் அஞ்சாமையும் நன்கு சக போராளிகளாலும், பொறுப்பாளர்களாலும் உணரக் கூடியதாக இருந்தது. கோட்டையில் செல்லடி தொடங்கியதும் வெளிக்கிடப் போறான் என்ற ஊகம் போராளிகள் மத்தியில் எழும். உடனே கடமையிலுள்ள போராளிகள் அனைவரும் தமக்கென ஒதுக்கப்பட்ட நிலைகளுக்கு விரைந்து செல்வர். இந்த விரைவு நகர்வு வேளைகளிலெல்லாம் மாலதியே தனது நிலைக்கு முதலில் சென்று விடுவாள். சகபோராளிகள் செல்லடிக்கு நிலையெடுத்து நிலையெடுத்து செல்வார்கள். மாலதியோ அவ்வாறல்ல முகாமிலிருந்து ஓடத் தொடங்கினால் நிலையை அடைந்ததுமே திரும்பி பார்ப்பாள். எம் தாய்நிலத்தைக் கொள்ளை கொண்டு போக வந்த அந்நியனை அழிப்பதற்கு சுடு கலனோடு பார்த்த விழி மூடாமல் காத்திருப்பாள்.

யாழ் பொலிஸ் நிலைய விடுதி முகாம், யாழ் கோட்டை இராணுவ முகாம் என அவள் யாழ் குடாநாட்டில் இராணுவம் நின்ற பகுதிகள் எங்கும் இராணுவத்தை நகர விடாது தடுக்கும் பணிகளில் முன்னின்று செயற்பட்டாள். தளபதி கிட்டண்ணாவின் நேரடி நெறிப்படுத்தலில் மேற்கொள்ளப்பட்ட யாழ் பொலிஸ் நிலைய விடுதி படை முகாம் தகர்ப்பிலும் கலந்து கொண்டாள் மாலதி.

இந்திய இலங்கை ஒப்பந்த காலத்தில் பளைப் பகுதியில் அரசியல் வேலைகளைச் செய்வதற்காக அனுப்பப்பட்டாள். எடுத்த காரியம் யாவையும் செவ்வையாய் ஆற்றுகின்ற மாலதி இந்தியப் படைகளுடனான போர் தொடங்கிய வேளையில் கைதடி கோப்பாய் பகுதியில் எதிரிகளுடன் சமராடவெனச் சென்றாள்.

இச்சமர் முனையிலேயே மாலதி வீரச்சாவடைந்தாள். வாழும் போது சாதனை மிக்க போராளியாக இருந்த மாலதியின் பெயர் சொல்லும் வகையிலாக இன்று மாலதி படையணி பெரும் சாதனைகளைப் படைத்தவாறு அவளது கனவை நனவாக்க விரைந்து கொண்டிருக்கின்றது.

"பூவென்றும் கொடியென்றும்
முன்னைப் புலவர்களின் உவமையெல்லாம்
பொய்யாகிப்போக
பழைய பார்வை விழிகள் குருடாகிப் போக
ஒப்பனைகள் உதறி விட்டு
கைகளில் கருவி தூக்கிக் களமாடி நின்றவள்,
மண்ணிக்குள் விதையான மாவீரர்
வரிசையிலே
பெண்ணுக்குள் இவளே முதலான பெருமாட்டி" என

தமிழீழக் கவிஞர்களின் கவிவரிகளுக்கு கருப்பொருளாயும், தமிழின விடுதலையின் வரலாற்று நடுகல்லும் ஆனாள்.





eelamhouse.com

# மாவீரர் நினைவுக் குறிப்பு

## 27.11.1982 தொடக்கம் 20.11.1999 வரை வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் மொத்த எண்ணிக்கை



### சில முகாம் தகர்ப்புக்கள், இராணுவ நடவடிக்கைகளில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| ஆ.க.வெ.சமர் | - 604 |
| மணலாறு | - 233 |
| ஒப்பரேசன் தவளை | - 460 |
| கொக்குத்தொடுவாய் | - 175 |
| இடிமுழக்கம் | - 181 |
| சூரியக்கதிர் | - 438 |
| ஓயாத அலைகள் -1 | - 315 |
| சத்ஜெய - 02 | - 100 |
| சத்ஜெய - 03 | - 133 |
| பரந்தன் - ஆனையிறவு | - 193 |
| வவுணதீவு | - 103 |
| கிளிநொச்சி, பரந்தன் படைத்தளம் மீதான ஊடுருவித் தாக்குதல் | - 300 |
| ஓயாத அலைகள் - 2 | - 403 |
| ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையும் அதன்மீதான எதிர்த்தாக்குதல்களும் | - 2146 |
| ஓயாத அலைகள்-3 (20.11.99 வரை) | - 179 |

### 20.11.1999 வரை தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் வீரச்சாவடைந்த கரும்புலிவீரர்களின் எண்ணிக்கை

**தரைக்கரும்புலிகள்**

| | |
|---|---|
| ஆண் தரைக்கரும்புலிகள் | - 49 |
| பெண் தரைக்கரும்புலிகள் | - 10 |
| மொத்தம் | - 59 |

**கடற்கரும்புலிகள்**

| | |
|---|---|
| ஆண் கடற்கரும்புலிகள் | - 70 |
| பெண் கடற்கரும்புலிகள் | - 31 |
| மொத்தம் | - 101 |

**கரும்புலிகள்**

| | |
|---|---|
| ஆண் கரும்புலிகள் | - 119 |
| பெண் கரும்புலிகள் | - 41 |
| மொத்தம் | - 160 |

### ஆண்டுவாரியாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| 82ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 01 |
| 83ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 05 |
| 84ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 36 |
| 85ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 123 |
| 86ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 258 |
| 87ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 451 |
| 88ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 363 |
| 89ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 372 |
| 90ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 960 |
| 91ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1613 |
| 92ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 788 |
| 93ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 925 |
| 94ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 374 |
| 95ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1502 |
| 96ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1374 |
| 97ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 2101 |
| 98ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1788 |
| 99ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1044 |
| ஏனையோர் | - 266 |
| தனிக்குழு | - 10 |

### மாவீரர்களின் மொத்த எண்ணிக்கை

| | |
|---|---|
| ஆண் மாவீரர்கள் | - 11,747 |
| பெண் மாவீரர்கள் | - 2,608 |
| மொத்தம் | -14,355 |



மாவீரர் பணிமனை, அரசியல்துறை, தமிழீழம்.



eelamhouse.com



வெளியீடு: அனைத்துலகச் செயலகம் - தமிழீழ விடுதலைப் புலிகள்

eelamhouse.com